விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 14 வெள்ளிக்கிழமை (31.08.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 255




# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க ஜே.வி.பி.-ஐ.தே.க. முட்டுக்கட்டை



## அமைச்சர் ஜெயராஜ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு ஜே.வி.பியும் ஐக்கிய தேசியக்கட்சியும் முட்டுக் கட்டையாக இருப்பதாக அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மக்கள் குடியிருப்பு பகுதி மீது நேற்று முன்தினம் இரவு கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தின. இரு கிபீர் விமானங்கள் இரவு 10.45 மணியளவில் 8 குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மக்கள் குடியிருப்புக்களையும் அதனை அண்டிய பகுதிகளையும் நோக்கியே இத்தாக் (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் மட்டக்களப்பு செங்கலடி காரியாலய உறுப்பினர்கள் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு ஏறாவூர் ஐயங்கேணிப் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் களுவாங்கேணிப் பகுதிக்கு செல்லும் வழியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்று 2 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட இருவரும் குட்டி என அழைக்கப்படும் சித்திரவேல் வசந்தன் மற்றும் கண்ணன் என அழைக்கப்படும் சின்னத்தம்பி சீனிவாசன் என இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களது சடலங்கள் மட்டக்களப்பு ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(ச-5)

## வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளை வடக்கில் மேற்கொள்ளும் திட்டம் இல்லை

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கோலாலம்பூர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வட பகுதியில் வலிந்த தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளும் திட்டம் ஏதும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

மலேசியப் பயணத்தின்போது கோலாலம்பூரில் ரொய்ட்டர் ஊடகவியலாளரிடம் அவர் இதனைத் தெரிவித்தார். 24 ஆண்டு கால இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுத்து வருகிறது.

வட பகுதியில பாரிய வலிந்த தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளும் திட்டம் ஏதும் இல்லை. தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் திரும்பவைக்கவேண்டும் என்பதுதான் எமது விருப்பம். எதிர்வரும் சில வாரங்களில் அரசாங்கம் அமைத்த அனைத்துக்கட்சிக் குழுவானது அரசியல் தீர்வு பரிந்துரைகளை வெளியிடத் தயாராகும்.

அரசியல் தீர்வுக்கான பரிந்துரைகளை நாடாளுமன்றம் (08 ஆம் பக்கம் பார்க்க)

## அத்தாஸின் பாதுகாப்பு விலக்கலை கண்டித்து ஊடகவியலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மூத்த ஊடகவியலாளர் இக்பால் அத்தாஸின் பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக நேற்று பிற்பகல் 12.30 மணிக்கு தொடங்கிய இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

மகிந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சித்து எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் பங் (08 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதித் தீர்வு யோசனையை முன்வைத்து விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேசும்

### ஜனாதிபதியின் புதிய திட்டம் இது என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

## இரத்தினபுரியில் இன்று பேரணி

ஆளும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் அலை பேரணி இரத்தினபுரியில் இன்று நடைபெறும் என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க,

யக்கட்சி அறிவித்துள்ளது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவு அமைப்பாளர்களான மங்கள சமரவீர மற்றும் சிறீபதி சூரியாராட்சி ஆகியோர் இந்த பேரணியில் பங்கேற்கின்றனர். இப்பேரணியையொட்டி இரத்தினபுரியில் போக்குவரத்துக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ச)

## ஜனாதிபதியின் புதிய திட்டம் இது என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் இறுதித் தீர்வு யோசனைகளை முன்வைத்து அதன் மூலம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய திட்டமொன்றை முன்வைக்கவிருப்பதாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும்நோக்கில் சர்வகட்சிகள் பிரதிநிதிகள் குழுவின் இறுதித் தீர்வுயோசனைகள் இன்னும் இரு வாரங்களில் முன்வைக்கப்படும் எனவும் அவர் கூறினார். சர்வகட்சித் தலைவர்கள் கூட்டம் பிரதமர் விக்கிரமநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே இந்த முடிபு எட்டப்பட்டுள்ளது. அத்துடன் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான (08 ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய விசா அலுவலகம் சென்னைக்கு மாற்றப்படவுள்ளது

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் கொழும்பிலுள்ள தனது விசா அலுவலகத்தினை மூட தீர்மானித்துள்ளதுடன் அவ் அலுவலகத்தை சென்னைக்கு மாற்றவுள்ளதாக டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மறுபரிசீலனை செய்யப்படுவதாகவும் இவை பூர்த்தியான பின்பு பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவிக்கும் என உயர்ஸ்தானிகராலய பேச்சாளர் ஜோன் குலி, டெய்லி மிரரிற்கு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து ஜோன் குலி மேலதிக தகவல் எதனையும் தெரிவிக்கவில்லை. இது குறித்து செப்ரெம்பர் மாதம் தூதரகம் அறிவிக்குமென அவர் தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் விசா அலுவலகத்திற்கு பெருமளவான விசா (08 ஆம் பக்கம் பார்க்க)

## பிரி.யின் தீர்வுத்திட்டத்திற்கு ஜே.வி.பி.கடும் கண்டனம்


(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண பிரித்தானிய அரசாங்கம் தயாரித்து வரும் தீர்வுத் திட்டத்திற்கு ஜே.வி.பி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா நேற்று இக் கண்டனத்தை வெளியிட்டுள்ளார். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் என்ற பெயரில் புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கவே பிரித்தானிய அரசாங்கம் முயற்சி செய்கிறது.

ஐ.நா மனித உரிமை அமைப்புகள், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புக்கள் இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடுகின்றன. அந்த வரிசையில் பிரித்தானியாவும் (08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்திற்கு கடன் வழங்கக்கூடாது கொழும்பில் ஐ.தே.கட்சி ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

அரசாங்கத்துக்கு அனைத்துலக வங்கிகள் கடன் வழங்கக்கூடாது என்பதை வலியுறுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள ஏச்.எஸ்.பி.சி.வங்கி தலைமையக கட்டடத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (08 ஆம் பக்கம் பார்க்க)

# 2008 ஆம் ஆண்டுக்கான பாட நூல் விநியோகப் பணி ஆரம்பம்

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டுக்கான பாட நூல்களை பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இம்முறை புதிய முறையில் பாட நூல்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இவற்றை பொறுப்பேற்றுக் கொள்வர் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய பாடசாலைகளுக்கும் மற்றும் 2 ஆயிரம் மாணவர்களுக்கு அதிகமாகவுள்ள பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சினால் பாட நூல்கள் நேரடியாகவே விநியோகிக்கப்படும் என கல்வி பிரசுர ஆணையாளர் எம். தர்மசேன தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கும் இம் முறை பாட நூல்கள் விநியோகிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அடுத்த வருடத்திற்கு பாடசாலை மாணவர்களுக்கு 78 வகையான பாட நூல்களில் மூன்று கோடி பிரதிகள் தேவைப்படுகின்றன.

அவற்றில் 90 சதவீதமானவை அச்சிடப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர்கள் சமர்ப்பித்துள்ள பட்டியலின் அடிப்படையிலேயே இம் முறை பாடநூல்கள் விநியோகிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் உள்ள தேசிய பாடசாலைகளின் நூலகங்களுக்கு தேவையான புத்தகங்களை வழங்குவதற்காக 4 கோடி 35 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை கல்வி அமைச்சு ஒதுக்கியுள்ளது.

இவ் வருடம் செம்ரெம்பர் மாதம் 8 திகதி முதல் 16 ஆம் திகதி வரையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள சர்வதேச புத்தகக் கண்காட்சியின் போது தமது பாடசாலை நூலகங்களுக்கு தேவையான புத்தகங்களை கொள்வனவு செய்து கொள்வதற்கு வசதியாக ஒதுக்கப்பட்ட நிதியை தேசிய பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை தேசிய பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கும் வைபவம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இவ் வைபவத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கல்வி சேவைகள் அமைச்சர் நிர்மல கொத்தலாவல ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-5)



மூத்த ஊடகவியலாளர் இக்பால் அத்தாஸின் பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் சுலோக அட்டைகளுடன் காணப்படுகின்றனர்.

# இலங்கையில் ஆட்சி மாற்றத்தை பிரித்தானிய அரசாங்கம் விரும்புகிறது

## சமாதான செயலகப் பணிப்பாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என பிரித்தானியா விரும்புவதாக அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ரஜீவ விஜயசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்து ஆசியனுக்கு செவ்வி வழங்கிய போது அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையின் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் அமெரிக்கா அக்கறை காட்டி வரும் அதேவேளை இந்தியா-அதைவிட அதிக அக்கறை செலுத்தவேண்டும் எனவும் கூறினார்.

பிரித்தானியா தனக்கு விருப்பமான ஐக்கிய தேசியக்கட்சியை ஆட்சி பீடம் ஏற்றுவதற்கு முனைகின்றது. அத்துடன் இலங்கையில் தற்போதைய பாதுகாப்புச் செயலாளரை அலட்சியப்படுத்துவதுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை மாற்றும் நோக்குடனும் செயற்பட்டு வருகின்றது.

மேற்கத்தேய மனித உரிமைகள் சங்கம், தமிழீழ விடுதலைப்புலிகள், ஐக்கிய தேசியக் கட்சி, சர்வதேச ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் சார்பிலும் செயற்படுகிறது என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் கிழக்கில் இராணுவ நடவடிக்கையில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளனர். எனவே அதை மறைக்கும் முகமாக அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களைக் கூறி அவற்றை மறைக்க முற்படுகின்றனர். இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அமெரிக்கா, யப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றைவிட இந்தியாவே அதிக முனைப்புடன் செயற்படவேண்டும் எனவும் அவர் கூறினார். (சு)

# நியமனம் வழங்கலும் பயிற்சி நெறி ஆரம்பமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார பயிற்சி நிலையத்தில் பயிற்சியை நிறைவு செய்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 26 பொது சுகாதார பரிசோதகர்களுக்கு நியமனக்கடிதங்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தில் வழங்கப்படும்.

அன்றைய தினம் வடமாகாணத்தைச் சேர்ந்த அடுத்த தொகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கான 18 மாத கால பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய கலாநிதி எஸ்.குமாரவேற்பிள்ளை கலந்து கொள் கிறார். (சு)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு அருள் மிகு ஸ்ரீநாராயண தேவஸ்தான கிருஷ்ண ஜெயந்தி விழாவும் அலங்கார உற்சவ விழாவும் எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

விழாக்காலங்களில் மாலை 4.30 மணிக்கு ஆன்மீக இலக்கிய சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது. (சு)

# பணம் திருடியவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பிரான்பற்றுப் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் பணம் திருடிய நபர் ஒருவரை இளவாலைப் பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கக்கிளை ஒன்றில் 63 ஆயிரம் ரூபா பணத்தினை பட்டப்பகலில் திருடியது மற்றும் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை அபகரித்தமை தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் மேற்படி குற்றங்களை நீதிமன்றில் ஒப்புக்கொண்டமைக்கமைவாக நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் அந்நபரை விளக்கமறியலில் வைக்குமாறு இளவாலைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (சு-5)

# முன்பள்ளி விளையாட்டு

(பருத்தித்துறை)

புலோலி பெரிய தேவனத்தாய் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

புலோலி கல்வி நிலைய இயக்குநர் கே.வி. என்.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டு நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபை செயலர் எஸ்.பசுபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (சு-52)

# நினைவு மலர் வெளியீடு

(பருத்தித்துறை)

பட்டயக்கணக்காளர் அமரர் கலாநிதி அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளையின் ஆத்மா சாந்தி பிரார்த்தனையும், நினைவு மலர் வெளியீடும் இன்று காலை 10 மணிக்கு பருத்தித்துறை ஞானசம்பந்தன் கலையரங்கில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமை தாங்குகிறார். (சு-52)

# சர்வதேச சமூகத்தின் பொறுமையானது ஒருபோதும் அமைதியைக் கொண்டுவராது

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேசம் பொறுமை காப்பது ஒருபோதும் அமைதியை கொண்டுவர உதவ மாட்டாது என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அவ் அமைப்பு ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கை வருமாறு; யாழ்.குடாநாட்டில் மக்களுக்கான அனைத்து சுதந்திரங்களும் மறுக்கப்பட்டு மக்கள் ஒரு இருண்ட யுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

தொண்டு பணியாளர்கள் கடமையைப் புரிவதற்கு உலகிலேயே மிக மோசமான இலங்கைத்தீவில் குடாநாடு முன்னிலை வகிக்கின்றது. கொலைகளும், கடத்தல்களும் இலங்கைத்தீவில் அதிகம் இடம் பெறும் இடமாக குடாநாடு சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் உலகிலேயே ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பற்ற மிக மோசமான இடமாக பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்ட இடமாக குடாநாடு கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குடா நாட்டு மக்கள் தமது அன்றாட வாழ்வைக்கழிப்பதற்கு திணறிக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு நிம்மதி அளிக்கும் இடமாக மக்கள் நிம்மதி தேடிச் செல்லும் இடமாக இன்று குடாநாட்டின் வணக்க ஸ்தலங்களே விளங்குகின்றன. குடாநாட்டு மக்களுக்கான ஒரே ஒரு தரை வழிப்பாதையும் பூட்டப்பட்ட நிலையில் மக்களுக்கான அடிப்படை உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்ட நிலையில் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

ஒரு புறம் கொலைகளும் ஆட்கடத்தல்களும் கப்பம் பெறுதல்களும் மக்களை அச்சத்தில் உறைய வைத்துள்ளது. மறு புறம் தொழில் தடை, பொருட்களின் பாரிய விலையேற்றம், வறிய மக்களினதும் மாணவர்களினதும் வாழ்வை கேள்விக் குறியாக்கியுள்ளது.

தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாக இனியும் சர்வதேசம் பொறுமை காப்பது ஒருபோதும் அமைதியைக் கொண்டுவர உதவ மாட்டாது. மீண்டும் மீண்டும் சர்வதேசத்தை ஏமாற்றி சர்வகட்சிக் கூட்டங்களை நடத்தி சர்வகட்சிக் கூட்டங்களின் மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக கூறிவரும் இலங்கை அரசுகள் உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயலவில்லை என்பதனையும் சர்வகட்சி கூட்ட காலங்களிலேயே அந்த இடைவெளியைப் பயன்படுத்தி தமிழ் மக்களை அழித்தொழித்து வருகின்றனர் என்பதனையும் சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களை அழித்தொழிப்பது அல்லது அவர்களை அடிமைப்படுத்துவது என்பதே மாறிமாறி ஆட்சிக்கு வரும் சிங்கள அரசுகளின் வழமையான செயற்பாடு என்பதனையும் ஒருபோதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசுகள் தீர்க்காது என்பதனையும் சர்வதேசம் புரிந்து கொள்ளவேண்டும்.

மாறாக சர்வதேசத்தினது இலங்கை அரசுக்கு பக்கவாத்தியம் பாடும் செயற்பாடுகள் தமிழ் சமூகத்தை, நம்பிக்கைகள் வீணடிக்கப்பட்ட நிலையில் மிக மோசமான வன்முறைப் பாதைக்கே இட்டுச் செல்லும். இது மிகமோசமான விளைவுகளை உருவாக்கிவிடும் என்றுள்ளது. (எ)

# பழரசப்போத்தல்கள் பறிக்கப்பட்டு அழிப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பிரதேசத்தில் சுகாதார சீர்கேடாக உற்பத்தி செய்த 800 பழரசப் போத்தல்கள் சுகாதாரப் பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றின் அனுமதியுடன் அழிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 800 பழரசப் போத்தல்களும் பொதுச் சுகாதாரப் பிரிவில் அனுமதி பெறாமல் உற்பத்தி செய்ததுடன், காலாவதித்திகதி முடிபடைந்தாகவும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பொதுச் சுகாதாரப் பிரிவினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக, நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவனின் உத்தரவுக்கு அமைய அவை அழிக்கப்பட்டுள்ளன. (சு-5)

# வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் பவளவிழாவை முன்னிட்டு நடைபெறும் ஐந்து வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை பிற்பகல் 3 மணிக்கு வட்டு. இந்து வாலிபர் சங்க மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலர் திருமதி ரி.பாபு, யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன், வலம்புரியின் பிரதம ஆசிரியர் என்.விஜயசுந்தரம், சென்.ஜோன் கல்லூரியின் உப அதிபர் கிளிபேட் அந்தோனிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ விருந்தினராக கஜமுகன் ஹாட் வெயர் உரிமையாளர் பி.நாகரத்தினம் கலந்து கொள்கின்றார். நாளை நடைபெறும் இறுதிப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் ரெட்ரேஞ்சர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (சு)


## நியூ சிற்றி றேட்

சகல விதமான வீட்டு மின் இணைப்புக்களுக்கும், சார்ஜர் லைற், ஸ்ரெப்லைஷர், கிறைண்டர், Fan (Table Fan, Stand Fan), விளையாட்டுப் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்,

*NEW CITY TRADE*

135, கஸ்தூரியார் வீதி,
(குளத்துக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 222 3226

(C-260)

# இன்று ஒரு தகவல்

## பட்டினி பயன் தரும்

சாப்பிட்டாமல் இருந்து பாருங்கள்! அதனாலே கிடைக்கிற சௌகரியம் நிறைய உண்டு. நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் நமது உடம்புக்குள் எவ்வளவோ கோளாறுகள் இருக்கலாம். எல்லாவற்றையும் செலவு இல்லாமல் சர செய்வதற்குச் சிறந்த வழி –சாப்பிடமால் இருப்பது தான்!

உடம்பிலே உண்டாகக்கூடிய நோய் –சுகக்கேடு– எல்லாவற்றையும் இயற்கையாகவே ஜீவ அணுக்கள் சரி செய்து விடுகின்றனவாம்! உண்ணா நோன்பு உடற்கூறு ரீதியான ஓய்வு என்று சொல்கிறார்கள். இது நோயைக் குணப்படுத்துகிறது! அதுமட்டுமல்ல நோய் வாராமலும் தடுக்கிறது. 'லங்கணம் பரம ஔடதம்' இது வடமொழி பழமொழி. சாப்பிடாமல் இருந்து தான் பிரார்த்தனை, தியானம் எல்லாம் செய்வார்கள். இது வெறும் தெய்வீகம் மட்டுமல்ல விஞ்ஞானம் கலந்த தெய்வீகம்!

வயிறு நிரம்பச் சாப்பிட்டு விட்டு தியானம் செய்கிறேன். பிரார்த்தனை செய்கிறேன், என்று ஆரம்பித்தால் உங்களுக்கு தெய்வீக சிந்தனை வராது– தூக்கம் தான் வரும்! தூங்கிவிழிப்பீர்கள். மறுபடியும் சாப்பிடலாமா என்று தோன்றும். உடம்பிலே உண்டாகின்ற தேவையில்லாத கழிவுப் பொருள் நீங்குவதற்கு 'பட்டினி' அவசியம். இயற்கை வைத்தியத்திலேயே உன்னா நோன்பு ஒரு முக்கியமான சிகிச்சை.

உன்னா நோன்பு எப்பொழுது இருப்பது? எப்படி இருப்பது என்பது நோயின் தன்மையைப்பொறுத்தது. சாப்பிடாமல் இருப்பதற்கு நான் தயார் என்று துணிச்சலாகக் கையைத் தூக்கிறவர்கள் மட்டும் முன்னால் வாருங்கள்! நான் சொல்வதைக்கொஞ்சம் கேட்டுக்கொள்ளுங்கள். எப்பொழுது ஆரம்பிப்பது, எப்பொழுது முடிப்பது –இதைப் பற்றி நீங்கள் கொஞ்சம் தெரிந்துகொள்ளவேண்டும்.

குளிர் காலத்தில் இதுவேண்டாம். உடம்பிலே போதுமான தெம்பு இல்லையா? அப்படியானால் இது உங்களுக்கு வேண்டாம். நீங்கள் பட்டினி கிடந்து, ஏற்கனவே இருந்த கொஞ்ச நஞ்சத்தெம்பையும் விட்டுவிட்டு என்னிடம் சண்டைக்கு வருவீர்கள்!

நரம்புத்தளர்ச்சி, பயந்த சுபாவம், கோபதாபம் அதிகமாக உள்ளவர்கள் எல்லாம் விலகிக்கொள்ளுங் கள் உங்களுக்கு இது வேண்டாம்...

முதல் முறையாக உண்ணா விரதம் இருக்கப்போகிறீர்களா? அப்படியானால் நீங்கள் ஒரு வன்முறையை வைத்துக்கொள்ளுங்கள்! வாரத்திற்கு ஒரு நாள் சாப்பாட்டை நிறுத்துங்கள். அதற்குப் பதிலாக பழச்சாறு மட்டும் குடியுங்கள்.

முதலிலே காலை உணவை கைவிடுங்கள்! அதன் பின் மதிய உணவை நிறுத்துங்கள்! அதன் பின் பழச் சாறு மட்டும்குடித்துக்கொண்டு ஒரு நாள் முழுவதும் சாப்பிடாமல் இருங்கள்! இப்படிப் படிப்படியாக முன்னேற வேண்டும்.

சாப்பிடாமல் இருக்கிற நேரத்திலே நீங்கள் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? அதிர்ச்சி, ஆரவாரம் கூடாது. அமைதியான சூழ்நிலை வேண்டும். நல்ல காற்றோட்டம் வேண்டும். அதிக ஈரமான அல்லது அதிக வெதுவெதுப்பு அளிக்கக்கூடிய ஆடைகளை அணியக்கூடாது. சுத்தமான குடிநீர் பருக வேண்டும். மனதிலே நல்ல நம்பிக்கையும் பூரண ஓய்வும் மிகவும் முக்கியம். உண்ணா விரதத்துக்கு முன்னாலும் பின்னாலும் ஒரு வார காலத்திற்குள் கெட்ட பழக்க வழக்கங்கள் எதுவும் இருக்கக்கூடாது. உண்ணா விரதத்தை முடிக்கும் பொழுது பழச்சாறு, இளநீர் இப்படி ஏதாவது குடித்து அதை முடிக்கவேண்டும்.

உண்ணா விரதம் இருக்கும் போது உங்கள் உடம்பிலே சில அறிகுறிகள் தெரியலாம். தலை சுற்றல், தலை வலி, பலவீனம், இதயப்படபடப்பு, நாக்கில் மரத் தன்மை படிதல். ருசியில்லாமல் போதல் இது மாதிரி அறிகுறிகள் இருக்கலாம். அதற்காகக் கவலைப்பட வேண்டாம். உடம்பு வெப்ப நிலை, நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம் எல்லாம் வித்தியாசமாக இருக்கலாம்.

இயற்கை வைத்தியம் உண்ணாவிரதம் பற்றி என்ன சொல்கிறது தெரியுமா? உடம்பிலே சேர்ந்த நச்சுக்கழிவுகள் எல்லாம் உண்ணா நோன்பு காலத்திலே வெளியேற்றப்படுகிறதாம். உடல் பருமனைக்குறைப்பதற்கு உண்ணா நோன்பும் உணவுக்கட்டுப்பாடும் ஒரு நல்ல வழி! இடைவெளி விட்டு இருக்கிற விரதத்தினாலே உடம்புக்குப் புது உற்சாகம் ஏற்படுகிறது. எடை குறைகிறது. உடல் உறுப்புகளுக்கு ஓய்வு கிடைக்கிறது. உடம்பிலே சேர்ந்த நச்சுப்பொருளும் கெடுதல் செய்கிற பாக்டீரியாப் பொருட்களும் வெளியேறுகின்றன. நோய்க்கு இது நல்ல சிகிச்சையாக, மன நோயைக் கூட இது கட்டுப்படுத்துகிறது. புகையிலை– போதைப்பொருள் – பழக்கத்திலிருந்து விடுபட இது உதவியாக இருக்கிறது! எடை குறைந்து தோற்றத்தில் பொழிவு ஏற்படுகிறது. உற்சாகம் ஏற்படுகிறது! ஐம்புலன்களுக்கும் புத்துணர்ச்சி கிடைக்கிறது! அதனாலே சாப்பிடாமல் இருப்பதற்கு யார் யாரெல்லாம் தயார்! முன்னாடி வாருங்கள் பார்க்கலாம்!

என்ன சார் இது? எல்லோரும் போய்விட்டீர்கள் இங்கே நான் மட்டும் தனியாக நின்று கத்திக்கொண்டு இருக்க வேண்டியது தானா? என்ன இது? கத்திக் கத்தி எனக்கு பசி எடுக்கிற மாதிரி இருக்கிறது.!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணி முதல் 6.15 மணி வரை 'நாவலர் மரபு' என்னும் பொருளில் இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா. வேதநாதனின் சொற்பொழிவும், பெரியவிளான் வட கேசரிப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சங்கானை மாவடி அற நெறிப் பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும்.

✡ ✡ ✡

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இடம் பெறும் வாராந்த ஆன்மீக நிகழ்வுகளில் வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பகல் 10 மணிப்பூசை நிறைவுற்றதும் சொல் வேந்தன் பொன். சுகந்தனின் 'இராமாயணம்' (தொடர்) சொற் பொழிவு இடம்பெறும். (அ)

## மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மேற்கு கலைமகள்சன சமூக நிலையத்தின் கல்வி அபிவிருத்தி வளர்ச்சி நிதிக்காக மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிறுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கந்தரோடை சவாரித்திடல் மைதானத்தில் நிலையத் தலைவர் ப.உதயகுமார் தலைமையில் நடை பெறும்.

இந் நிகழ்வில் இத்துறை சார்ந்த அறிவு பெற்றவர்கள் கலந்து சிறப்பிக்க உள்ளனர் என்றும், போட்டிகள் ஏ,பி,சி என மூன்று வகையாகப் பிரித்து நடைபெறவுள்ளது என்றும் சன சமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (அ)

## கலந்துரையாடல்

கலைப்பீட அனைத்து வருட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் என்.வினோதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)


## இராசிபலன்

31. 08. 2007
(ஆவணி 14, வெள்ளிக் கிழமை)
உத்தரட்டாதி காலை 05.57 மணிவரை
திருதியை முற்பகல் 11.02மணிவரை
ரேவதி பின்னிரவு 5.24 மணிவரை
இராகுகாலம் 10.35–12.05 மணிவரை
சுபநேரம் 06.05–07.35 மணிவரை
சித்தாமிர்தம் சங்கடஹர கணபதி விரதம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், சுப செலவு உறவினர் மனஸ்தாபம், சயன சுகக்குறைவு. |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், குடும்ப மகிழ்ச்சி, கீர்த்தி. |
| மிதுனம் | அதிகாரம், கடின முயற்சி, போசன சுகம், தூரதேச செய்தி. |
| கடகம் | பிரயாணம், பிதாசிந்தை, புதிய திட்டம் சரீரப்பிரயாசை. |
| சிங்கம் | முயற்சி தாமதம், போசன நன்மை, நண்பர்கள் சந்திப்பு, அபகீர்த்தி. |
| கன்னி | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய சித்தி, விருந்துபசாரம், பொருள் சேர்க்கை. |
| துலாம் | காரிய நன்மை, பொருள் வருவாய், புதிய விடயம், உடல் நலம். |
| விருச்சிகம் | மரியாதைக்குறைவு, தாய்வழி உறவு, சுபசெலவு, முயற்சி கைகூடும். |
| தனுசு | கூட்டு முயற்சி, போசன சுகம், பிரயாணம், நண்பர்கள் உதவி. |
| மகரம் | மனச்சோர்வு புதிய முயற்சி, திடீர் நன்மை, தாய்வழியுறவு. |
| கும்பம் | கடின வார்த்தை, முயற்சி தாமதம், பண விரயம், போசன சுகக்குறைவு. |
| மீனம் | கற்பனை மிகுதி, நல்லமுயற்சி, நணபர்கள் சந்திப்பு, தேக நலன் |

- வளவன்

## நல்லூரான் திருவடிக்கு இன்று. பதினான்காம் திருவிழா



## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே
இரவு பகல் காணேனடி

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்ன மொழி
நான் மறந்து போவேனோடி - கிளியே!
நல்லூரான் தஞ்ச மெடி

யோகர் சுவாமிகள்

## கருணைக் கடலாக வந்திடுவாய்

நல்லூர்த் திருப்பதியில் நீயிருந்தால் முருகா
கல்லினுட் தேரைக்கும் உணவிருக்குமங்கே
தொல்லைகள் தருவோருக்கு நல்லறிவை நல்கினால் முருகா
பல்லின மக்களும் பயம் நீங்கிப் பயன் பெறுவரிங்கே
சொல்லொனாத் துன்பங்கள் எமக்கேன் தந்தாய் முருகா
கொல்களம் மலிந்ததால் கொதிப்புடைந்தாயோ நீ
வல்லமையில்லாதோர் வறுமையால் வாடுவதேன் முருகா
கல்லாயிருக்காது கருணைக் கடலாக வந்திடுவாயே

சி.காசிப்பிள்ளை

## நாடிடுவோர்க்கு நல்லருள் தருக

ஞானப்பழம் வேண்டி
ஞாலத்தை வலம் வந்தவேலா
தேவர் துயர் துடைக்க
தேடியே சூரனைக்கொன்றவேலா
நாளும் உனைநாடி வந்து
கூடித்தொழு மடியார்க்கு
வீதி வந்து அருள்வாயே முருகா
வேண்டும் வரம் தருவாயே முருகா

நீர்வை மணி

## குறைகள் கழை அன்றேல் கூட்டுள் இரு

ஆறு மணி தூரன் ஏமது நாளானாற் கூட
அதை மாற்ற முயலாது அதற்கிடையில் வந்து
காட்சிதர வைப்பதுந்தன் கருணை யிதுவென்றால்
மாறுபடுசூரனை நீ வதைத்தவும் பொய்யோ?
வேறு வழி தெரியவில்லை வேலா உனக்குரைக்க
கூறு பதில் குறைகள் கழை கூட்டுள் இரு அன்றேல்.

கவிமணி அன்னைதாஸன்

## அல்லல் தீர்க்க கண்திறப்பாய்

என்றும் நலம் நல்கும் நல்லூரானே
உளம் வெந்து வாழும் நமது
அல்லல் தீர்க்க கண்திறப்பாய்
தொல்லைகள் தீர்ந்திடும் நாள் எதுவோ!
கருணை புரிந்து காத்திடுவாய்

கொற்றையூர் வ.காந்திமதிநாதன்

## மனம் குளிர வரமருள்வாய்

நல்லூரான் புகழ்பாட
சொல்லேது நம் தமிழில்
மெய்சிலிர்க்கும் அவன்மகிமை
பொய்யாகிப் போய்விடுமா?
மலராலே அலங்கரித்த
மால்மருகன் திருக்கோலம்
கண்களுக்கு விருந்தென்றால்
கவலைக்கு மருந்தன்றோ

ஸ்ரீபுராதனி இராஜகோபாலன்

## வள்ளியின் தூது (வாட்டம்) நல்லூர் வேலனுக்கு

வள்ளி வள்ளி என வருவாய் வடிவேலா
அள்ளி அள்ளி நான் தருவேன் அன்பை
துள்ளி துள்ளி விளையாடினோமுன்னை காணோம்
பள்ளி பள்ளி அறைமேல் குண்டோசையா பாராயோ

ச.சே. மனோகரா வள்ளி

# இலங்கையின் சமாதானமும் முரண்பாடும்

நெதர்லாந்து சர்வதேச நிறுவனமான 'க்ளின் ஜென்டால்' நிறுவனத்தின் ஏற்பாட்டில 2004ஆம் ஆண்டு ஜோர்ஜ் ப்ரீ ரெக்ஸ் பார்ட் க்ளெம் ஆகியோரால் பதிப்பிக்கப்பட்ட ***'பல் வகையினை கையளுதல் இலங்கையின் சமாதானமும் முரண்பாடும் பற்றிய சொல்லாடல்' என்ற நூலில்*** நான்கு பகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- தென்னிலங்கையைச் சேர்ந்த கல்விமான்களின் கருத்துக்கள்
- கிழக்கு இலங்கை தமிழ் கல்விமான்களின் கருத்துக்கள்
- கிழக்கு இலங்கை முஸ்லிம் கல்விமான்களின் கருத்துக்கள்
- வட இலங்கை கல்வி மான்களின் கருத்துக்கள்.

இந் நூற் தயாரிப்பில் ஈடுபட்ட நிறுவனத்தினர் மேற்கூறிய சகலரையும் இணைத்து ஓர் செயலமர்வை நடாத்தினர். இச் சந்திப்புக்களில் நடை பெற்ற கலந்துரையாடல்களே இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இதில் வட இலங்கை கல்விமான்களின் கருத்துக்கள் வாசகர்களுக்குத் தரப்படுகின்றது. (ஆ-ர்)

## அகிம்சையிலிருந்து ஆயுதப் போராட்டத்துக்கு

ஆக தமிழர் தாயகம் என்னும் எண்ணக்கருவானது சுதந்திரத் துக்குப் பின்னர் தமிழரசுக் கட்சியினதும், பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினதும் அரசியல் தத்துவமாக வளர்த்தெடுக்கப்பட்டு, சமஷ்டி முதல் தனிநாடு வரையான பல்வேறு அரசியல் மாதிரி அமைப்புக்களாக உருமாறி வந்துள்ளது. வடபுல மக்களின் குறிப்பாக யாழப்பாண மக்களின், இயல்பு பற்றி போர்த்துக்கேய வரலாற்றாசிரியர்கள் பின்வருமாறு கூறியுள்ளனர். 'இவர்கள் அமைதியும் மென்மையும் கொண்டவர்கள் ; இராணுவப் பயிற்சி அற்றவர்கள். எனவே வெளியார் தூண்டி விட்டாலொழிய கிளர்ச்சி செய்யமாட்டார்கள்' எனினும் இலங்கை பற்றிய நவீன வரலாற்றாசிரியரான மைக்கல் றொபரட்ஸ் Michael Roberts, 1978 :363) தனது கட்டுரையில் (இலங்கை இனப் பிணக்கும் சிங்கள மக்களின் கண்ணோட்டங்களும் இணக்கத்திற்கெதிரான தடைகள் Ethinic Conflict in Sri Lanka and Sinhalese Perspectives: Barriers to Accommodation )பின்வருமாறு எச்சரிக்கிறார் 'வட அயர்லாந்து, சைப்பிரஸ், லெபனான் போன்ற பயங்கர மாதிரிகளின்' திசையில் இலங்கையின் இனத்துவப்பிணக்கும் பரிணாமம் அடைய வாய்ப்பு உள்ளது' இனத்துவப் பிரச்சினையை அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் ஜனநாயக அடிப்படையில் அரசியல் ரீதயாகத் தீர்ப்பதை விடுத்து இராணுவ அடிப்படையில் தீர்க்க முயன்றன. இதன் விளைவாக அரசு இராணுவமயப் படுத்தப்பட்டு விட்டது. இன்று இந்த நாடு இராணுவ ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பிரிக்கப்பட்டு விட்டது. ஏனெனில் இங்கு இரண்டு இராணுவங்களும் இரண்டு அரசாங்கங்களும் உள்ளன.

**'பூமிபுத்திரா' எண்ணக்கருவின் வரலாற்று மரபுரிமையும் ஒற்றையாட்சி மாதிரியாலான யாப்பும்**

2003 ஒக்டோபர் 29ஆம் திகதி இலங்கையின் புதினப் பத்திரிகைகளில் ஒன்றான The Island பத்திரிகை A Case against a Federal Constitution of Sri Lanka' இலங்கையில் சமஷ்டி யாப்புக் கெதிரான ஒரு நிலைப்பாடு என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டது. இது சுதந்திரமானதும் பிரதிநிதித்துவம் கொண்டதுமான ஒரு குழுவினிரின் அறிக்கை' யாகும். அக்கட்டுரையிலிருந்து இரு பந்திகள் இங்கு தரப்படுகின்றன. 'பூமிபுத்திரா' எண்ணக்கருவும் பாளி நூல்கள் கூறும் 'கடந்த கால ஒற்றையாட்சியும்' எவ்வாறு

**2 மீள்பார்வை**


சிங்கள வெகுசனங்களின் உள்ளத்தில் இடம்பிடித்துள்ளன என்பதை இப்பந்திகள் நன்கு விளக்குகின்றன.

'ஐரோப்பியர் வருகைக்கு' முன்னர் இலங்கை 'சிங்களே' அல்லது 'சிங்களதீப' அதாவது சிங்களவர்களின் தேசம்' என அழைக்கப்பட்டது. மிக ஆரம்ப காலந்தொட்டு தென்னிந்திய திராவிட இனத்தவர் இங்கு வசித்து வந்தவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். வியாபாரிகளாகவும், பயணிகளாகவும், ஆக்கிரமிப்பாளர்களாகவும், கூலிக்குப் போரிடுபவர்களாகவும் அவர்கள் இங்கு வந்தனர். இத் திராவிடர்களில் தமிழர்கள் மாத்திர மன்றி மலபாரிகள், கேரளவாசிகள், பாண்டியர்கள், ஆந்திரர்கள் ஆகியோரும் அடங்கியிருந்தனர். பதினோரம் நூற்றாண்டில் சோழர் படையெடுப்புக்குப் பின்னர் பெருமளவு திராவிடர்கள் குறிப்பாகத் தமிழர்கள் இங்கு வந்து சேர்ந்தனர். இந்தத் திராவிடர்கள் பல்வேறு திராவிட மொழிகளைப் பேசிய வந்தேறு குடிகளாவர். அவர்கள் அங்குமிங்குமாக சில பிரதேசங்களில் குடியேறியிருக்கலாம். ஆனால் பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை இலங்கையின் அரசியல் நிகழ்வுகளில் செல்வாக்குச் செலுத்தக்கூடியளவுக்கு பாரிய நிரந்தரத் தமிழர் குடியமர்வுகள் இங்கு இருக்கவில்லை. 'தமிழர்கள்' எனத் தெளிவாக அடையாளமிடப்பட்ட இனத்தினர் பிரித்தானிய காலனித்துவ நிர்வாகிகளால் 1880க்குப் பின்னர் தான் அங்கீகரிக்கப்பட்டனர். 1907 இல் அவர்கள் சனத்தொகைக் கணக்கெடுப்பில் ஒரு வகுதியினராகப் பதியப்பட்டனர்.

கி.பி. 1505 வரை இலங்கை முற்றும் முழுதாக பௌத்த சனத்தொகை கொண்ட ஓர் ஏக மொழி, ஏக மத நாடாகவே இருந்தது. போர்த்துக்கேய, டச்சு, பிரித்தானிய படையெடுப்புகள் நாட்டின் சனத்தொகை அமைப்பையும் கலாசாரத்தையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு மாற்றியமைத்தன. புதிய மொழிக் குழுக்களும் சமயத்தவர்களும் இங்கு நிரந்தரமாகக் குடியேறத் தொடங்கினர். டச்சுக்காரர் புகையிலைத்தோட்டங்களிலும், விவசாய வேலைகளிலும் ஈடுபடுத்துவதற்காக தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்ரைக் கொண்டு வந்தனர். பிரித்தானியர் தமது கோப்பி மற்றும் தேயிலை தோட்டங்களில் வேலை செய்வதற்காக தென்னிந்தியாவிலிருந்து பெருந்தொகையான ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கொண்டு வந்தனர். இவர்களின் வழித்தோன்றல்களே மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் இன்னும் வாழ்கின்றனர். இவர்கள் 'அண்மைக்கால இந்திய வம்சா வழித் தமிழர்கள்' எனப்படுகின்றனர்.'

**இலங்கை நாகரீகத்தின் தோற்றுவாய் குறித்து தொல் பொருளியல் கருத்துநிலை**

ஆரம்ப ஆரிய குடியேற்றங்கள் எனக் கூறப்படும் பிரதேசங்க ளில் கிடைத்த தொல்பொருளியல் சான்றுகளின்படி தென்னிந்தியாவும் இலங்கையும் ஒரே கலாசார வல யத்துக்குரியவை இரும்புக் கால பெருங்கற்கலாசாரம் எனப்படும் இக் கலாசாரத்தின் தோற்றுவாய் கி.மு. 1000 ஆம் ஆண்டளவில் தமிழ் நாட்டில் காணப்படுகிறது. இலங்கையில் இக் காலகட்டத்தின் ஆரம்பம் கி.மு.



900 என 'காபன் டேற்றிங்' என்னும் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப் பட்டுள் ளது. (Sitrampal̃am 2002)

இக் கலாசாரத்தின் எச்சங்களைப்

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**

பகுப்பாய்வு செய்ததில் இவர்களும் தென்னிந்தியத் திராவிட மொழி பேசுபவர்களே எனவும், இவர்களே இலங்கையில் ஆகவும் முந்திய சமூக, பொருளாதார,அரசியல், சமய கலாசார அமைப்புக்களை அறிமுகஞ் செய்தோர் எனவும் அறியப் பட்டுள்ளது. இவர்களும் இவர்களுக்கும் முன்னர் இங்கு வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட மக்களும் சேர்ந்தே இலங்கை நாகரீகத்துக்கான அடிக்கல்லை நாட்டியவர்களாவர். தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகியவை தென் னிந்தியாவில் பொதுவான பெருங்கல் கலாசார அடிப்படையைக் கொண்டிருப்பதைப் போலவே பின்னர் அறியப்பட்ட எலு அல்லது ஆதிச் சிங்களம், தமிழ் என்பவை இக்கலாசாரத்தின் வழி வந்தவைகளாகும்.

(தொடரும்)

# உள்ளத்தில் பரிசுத்தமான எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்

இனிப்பு : நிரந்தரமும் நினைத்திருப்பது தீயனவற்றையே! அப்படியிருக்கையில் உனக்கு நல்லது கிடைக்கவேண்டும் எனில் அது எங்ஙனம் சாத்யமாகும்? வாயில் கசப்பான பொருளை அடக்கிக்கொண்டு எந்த இனிப்பை நீ உண்டால் என்ன? அனைத்துமே கசப்பாகத்தான் இருக்கும்! முதலில் கசப்பைத்தூர ஏறி! பிறகு இனிப்பைச் சாப்பிடு! அப்போது அனைத்துமே இனிப்பாக இருக்கும் ஒன்றைத் தூர எறிய வேண்டும் மற்றொன்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்!

இந்த டம்ளரில் நீர் இருக்கிறது. இதில் பால் சேர்க்க வேண்டும். அப்போது இதில் உள்ள நீரை வெளியே கொட்ட வேண்டும். பிறகு அதில் பாலைச் சேர்க்க வேண்டும் முதலில் செய்வது வியோகம் (Seperation) இரண்டாவது ஸம்யோகம் (Union) மனித வாழ்க்கை என்பது பிரிவு சேர்க்கை என்கிற அலைகள் நிறைந்த பெரிய சமுத்திரம் ஒன்றின்றி மற்றொன்றில்லை இரண்டையுமே ஒன்றாகப் பாவிக்கும் மனோநிலை வேண்டும். கஷ்டம் சுகம் இரண்டும் கலந்துதான் வாழ்க்கை . இவற்றைப் பிரித்து எடுப்பது என்பது யாராலும் இயலாதது. சுகத்தை மட்டும் தனியர்க்க காண முயற்சிக்காதே! கஷ்டம் குறையும்போது அதுவே மகிழ்ச்சியாக மாறுகிறது.

*பொறுமை:* இதேத ஒரு துணி இருக்கிறது. இது எப்படித் துணியாக மாறிற்று? நூல்களின் இணைப்பால் மட்டுமே இது துணியாக மாறியது. மனமும்கூட இவ்வாறு இரண்டு எண்ணங்களின் இணைப்பாகத்தான் அமைகிறது. ஒன்று நிஸ்சலம்- பொறுமை மற்றொன்று நிர்மலம்- தூய்மை இரண்டின் இணைப்புதான் மனம். ஆனால் அத்தகைய மனம் தற்போது கணத்துக்குக் கணம் தீயவற்றால் களங்கப்பட்டுப் போகிறது. இப் படியிருக்கையில் பவித்ரத்துவம் நமக்குள் எப்படி உருவாகும்? பிரபஞ்சம் எங்கும் தேடினும் இத்தகைய பவித்ரத்துவம் காணப்படுவதில்லை. பஞ்ச பூதங்கள் அனைத்துமே 'Pollute ஆகி மாசு பட்டு நிற்கின்றன. சப்தம் Pollution water Pollution தின்னும் உணவு Pollution அனைத்தும் Pollution இதற்கு மூலகாரணம் என்ன? மனமே Pollution ஆகிப்போய் விட்டது தான்! மனம் தீயதாய் மாறியதால் அனைத்துமே தீயதாய் காட்சி தருகின்றன. ஆகவே நாம் முதலில் நம் மனோபாவங்களை மாற்றக்கொள்ள வேண்டும். 'மனோ மூலம் இதம் ஜகத் '-இவ்வுலகம் உன் மனதின்படியே காட்சியளிக்கிறது. மனிதன் இறந்தாலும் கூட மனம் மரணிக்காது. தினைத்துப்பார்க்கையில் மனதில் எண்ணங்கள் நிரந்தரமாக இருக்கின்றன. ஆகவே உள்ளத்தில் பரசுத்தமான எண்ணங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இவையனைத்துக்கும் மூலகாரணமாக தெய்வ நாமத்தை இடைவிடாமல் ஸ்மரிக்க வேண்டும். இறைவன் நாமத்தின் சக்தியைப் பற்றி சிலர் கேலி பேசுகின்றனர். இறைவன் திருநாமத்தை ஸ்மரிப்பதன் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் வேறெதிலிருந்தும் நமக்குக் கிடைக்காது. எத்தனையோ பாடல்களைக் கேட்கிறீர்கள் ஒருமுறை இறைவனின் பெயரைக் கேட்பதால் கிடைக்கும் பலன்கள்தான் எத்தனை? ஆனால், தெய்வநாமத்தை மட்டும்நாம் நினைப்பதில்லை எல்லாபெயர்களையும் நினைக்கிறோம். உலகத்தில் இருக்கும் அனைத்து விஷ யங்களையும் பற்றி நினைக்கத் துவங்குகிறோம். இவற்றினால் என்ன பலன்? இந்தத் துன்பங்கள் எல்லாம் உங்கள் இயத்தினுள் நுழைந்து வாழ்க்கையைப் பாழாக்குகின்றன.

*உலகம்:* இவ்வுலகைப்பறிய் கவலை உனக்கு எதற்கு ? உன்னிடம் இருக்கும் தோஷங்களை முதலில் நீ நிர்மூலம் செய்! உன்னிடம் இருக்கும் குறைகளைத்தான் நீ மற்றவர் மீது திணித்து குறையிருப்பதாகக் காண்கிறாய்! மற்றவர்மேல் குற்றம் காண்பவர்களுக்குத் தன் மேல் இருக்கும் குறைகள் எதுவும் தெரியாது. நீ எதைத் தின்கிறாயோ அந்த வாசனையுடன்தான் ஏப்பமும் வெளிப்படுகிறது. உனக்கு வருகிற ஏப்பத்தை வைத்து மற்றவர் அதையே உண்டிருக்கிறார் என்று நீ வாதிடுவது எத்தனை முட்டாள்தனம்? அடுத்தவர் மாம்பழம் தின்றால் அவருக்குத்தான் அந்த ஏப்பம் வருமே தவிர உனக்கு அந்த

**ஆன்மீகம்**

ஏப்பம் வராது! நீ எந்தப்பழம் தின்கிறாயோ அதற்கான ஏப்பம்தான் உனக்கு வரும். அது போல் எண்ணங்கள் நல்லவையோ கெட்டவையோ அவை உன்னிடமிருந்தே பிறக்கின்றன. பிறர் எண்ணங்கள் உனக்கு வருவதில்லை. எந்த எண்ணமானாலும் அது உன் இதயத்திலிருந்தே பிறக்கின்றது. அவரால் எனக்கு இந்த தீய எண்ணம் ஏற்பட்டது. இதனால் தான் இத்தகைய உணர்வு ஏற்பட்டது என்று கூறுவதே தவறு அடுத்தவரை விமரிசிப்பதும் தவறு. ஏனெனில் அனைவரிடமும் இருக்கும் இறைவன் ஒருவரே ! பிறரை விமர்சிப்பது மஹா பாவம் ! மற்றவர்கள் என்னும் போது அவர்கள் ஏதோ வேறானவர்கள் என்னும்போது அவர்கள் ஏதோ வேறானவர்கள் அல்ல! அவர்கள் கடவுளன்றி வேறு எவரும் இல்லை. ஏனெனில் அனைவரிடமும் இருப்பது ஒரே கடவுளே! ஆகவே எவரையும் தூஷிக்கக்கூடாது. எவரையும் அகௌரவப் படுத்தக் கூடாது! அனைவருக்கும் மதிப்புக் கொடு! அப்போது தான் மற்றவர்களும் உனக்கு மதிப்புக்கொடுப்பார்கள். ஆனால் நீ மற்றவர்களை மதிக்க வேண்டும்.

*மதிப்பு:*-நீ மற்றவர்களை மதிக்காமல் அடுத்தவர்கள் உங்களை மதிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது எத்தனை முட்டாள்தனம்? உன்னிடம் நல்ல எண்ணங்கள் இருந்தால் மற்றவரிடமும் அத்தகைய நல்ல எண்ணங்களே நிலவும். உண்மையில் உன்னிடம் நல்ல உள்ளுணர்வுகள் இருக்குமானால் மற்றவரிடமும் அத்தகைய நல்ல உணர்வுகளே ஏற்படும். அனைத்துக்கும் மனமே மூலகாரணம் மனமின்றி மனிதன் இருக்க முடியாது.

உடல் ஒரு டார்ச்லைட் , கண்கள் பல்பு புத்தி என்பது 'ஸ்விட்ச்' புதுடார்ச் புது பல்பு ஸ்விட்ச், ஆன் செய்து இருந்தும் பல்பு எரியவில்லை காரணம் என்ன? மனம் என்கிற பாட்டரி ஸெல்கள் இல்லாததால் பல்பு எரியவில்லை. மனம் என்னும் ஸெல்கள் நல் சத்திமிக்கதாக இருக்கவேண்டும்.ள இருந்தால் வெளிச்சம் தெரியும். (தொடரும்)

## இரத்ததானம்

வருடாவருடம் நல்லூர் உற்சவ காலத்தின் போது யாழ் .இரத்த வங்கியால் ஆலயச் சூழலில் இரத்ததானம் முகாம் நடாத்தப்பட்டு வருகின்றது. இம்முறையும் பதின்மூன்றாம் உற்சவத்தில் 29.08.2007 இருந்து நல்லை ஆதீனத்தின் பிரதானவாயிலுக்கு எதிரே உள்ள வீட்டில் இரத்ததான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டு தினமும் பி.ப. 3.30 மணியிலிருந்து நடைபெற்று வருகின்றது.

மேலும் தேர் மற்றும் தீர்த்த உற்சவ தினங்களில் காலை வேளையிலும் இரத்ததானம் செய்யலாம் என யாழ்.போதனாவைத்தியசாலை இரத்த வங்கி வைத்திய அதிகாரி இ.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.(அ)

# ஆயுதப் போராட்டங்களுக்கு அரசியல் ரீதியாகவே தீர்வு காண முடியும்

## ஐ.நா.பொது செயலாளர் பான்கிமூன்

(வாஷிங்டன்)

ஐ.நா.பொதுச்செயலாளர் பான்கிமூன் ஆயுத சண் டைகளுக்கு அரசியல் ரீதியாகவே தீர்வு காண முடியும் என்று தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் ஐ.நா.பாதுகாப்பு சபை கருத்து ஒன்றுக்கு பதிலளித்த பான்கி மூன் பிரச்சினைகளுக்கு தீர்வு காண மேலும் பல வழிமுறைகளை நாம் காணவேண்டும். சமரசம் செய்வதிலும் நமது திறனை நாம் அதிகரிக்க வேண்டும். நம்முன் உள்ள பிரச்சினைகளை நமது அமைப்பின் திறனை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதனை உணர்த்துகிறது. அதற்காக புதிய நுட்பங்களை கண்டறிய வேண்டும். பிரச்சினைக்கான அடிப்படை காரணத்தை நாம் கண்டறிய வேண்டியது அவசியம் என்று தெரிவித்தார்.

சண்டைகளுக்கான அடிப்படை காரணத்தை கண்டறிந்து அதற்கு சரியான தீர்வு காணாவிட்டால் நமது அமைதி தூது முயற்சிகள் முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டே செல்லும். இப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முந்தைய பொதுச் செயலாளர் 1998 ஆம் ஆண்டு ஒரு திட்டத்தை உருவாக்கினார். ஆனால் அதனால் பெரியளவில் மாற்றம் ஏற்படவில்லை. எனினும் புதிய திட்டம் ஒன்றை நான் விரைவில் தாக்கல் செய்யவுள்ளேன். அதில் சண்டைகளுக்கான காரணங்கள் மற்றும் ஆபிரிக்காவில் அமைதி ஏற்படவும், முன்னேற்றத்திற்கும் வழி முறைகள் இருக்கும். மேலும் 1998 ஆம் ஆண்டு திட்டம் மற்றும் அதன் பரிந்துரைகளை முழுமையாக மறு ஆய்வு செய்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இந்த விடயத்தில் கற்றுக் கொண்டுள்ள பாடங்கள் குறித்தும் தெரிவிக்கவுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அடுத்த சில மாதங்களில் ஐ.நா.பாதுகாப்பு சபையில் அரசியல் விவகாரத் துறை பலப்படுத்துவது மற்றும் அதனது திறனை அதிகரிப்பது ஆகியவை குறித்தும் தான் திட்டம் ஒன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-5)

## அமெரிக்காவின் புதிய விண்கலம்



விண்வெளியில் மிதக்கும் சர்வதேச ஆய்வுக்கூடத்துக்கு அனுப்ப அமெரிக்காவின் நாசா நிறுவனமும் போயிங் நிறுவனமும் இணைந்து புதிய ஏரிஸ் -1 என்ற விண்கலத்தை உருவாக்க ஒப்பந்தம் செய்துள்ளது.

அந்த புதிய விண்கலத்தின் மாதிரி தோற்றத்துடன் இரு நிறுவனங்களின் அதிகாரிகள் போஸ் கொடுக்கும் காட்சி. இதே விண்கலம் சந்திரனுக்கும் அனுப்பப்படும். (அ-5)

## தக்காளித் திருவிழா



(புனோல்)

நம் நாட்டில் ஹோலிப் பண்டிகையின் போது வண்ணங்களைத் தூவிக் கொண்டாடுவது போன்ற விழாக்கள் உலகமெங்கும் நடந்தவண்ணம்தான் இருக்கின்றன.

படத்தில் காண்பது ஸ்பெயின் நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் தக்காளி திரு விழாக் காட்சி.

ஒரே நேரத்தில் 40 ஆயிரம் பேர் புனோல் என்ற இடத்தில் உள்ள ஒரு நகரில் கூடி தக்காளியை ஒருவர் மீது ஒருவர் வீசியும் பூசிக்கொண்டும் விளையாடியிருக்கின்றனர்.

ஆட்களை அடையாளம் காணமுடியாதபடி அங்கிக் கொனதபடி எங்கும் தக்காளி வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது அந்த இடம். இந்தக் கொண்டாட்டத்துக்கு மட்டும் ஒரு இலட்சம் கிலோ தக்காளி பயன்படுத்தப்படுகிறது. (அ-5)

# என் வயிற்றில் உள்ள கத்தியை யோகாவால் வெளியில் எடுப்பேன்

(கொல்கத்தா)

வங்கிகளில் 26 கோடி ரூபா முறைகேடு செய்ததாக ஜேர்மனியில் இருந்து இந்தியா கொண்டுவரப்பட்ட மோசடி மன்னன் கோஷ் கொல்கத்தா சிறையில் அடைக்கப்பட்டார். தன் வயிற்றில் உள்ள கத்தியை ஆப்ரேஷன் இல்லாமல் யோகாமூலம் எடுத்துவிடுவேன் என்று நிருபர்களிடம் கோஷ் கூறினார்.

இந்தியாவில் உள்ள நாலு வங்கிகளில் ரூபாய் 26 கோடி மோசடி செய்தவர் கொல்கத்தாவை சேர்ந்த மோசடி மன்னான அமேரேந்திரநாத் கோஷ். பசுபிக் பெருங் கடலில் உள்ள ஒரு குட்டி நாட்டின் அரசாங்கத்தையே கவிழ்த்தவர்.

ஜேர்மனி நாட்டில் தஞ்சம் புகுந்த கோஷ் அங்குள்ள பொலிஸில் சிக்கினார். அவரை இந்தியா கொண்டுவர சி.வி. ஐ அதிகாரிகள் தீவிர முயற்சி மேற்கொண்டனர். ஆனால் 8 சென்ரி மீற்றர் நீளமுள்ள கத்தியை கோஷ் விழுங்கி விட்டார். இதனால் அவரை இந்தியா கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டது.

3 ஆண்டு நடந்த சட்ட போராட்டத்திற்கு பிறகு அவரை பறக்கும் ஆம்புலன்ஸ் என்று அழைக்கப்படும் விமானத்தில் இந்தியா அழைத்து வந்தனர்.

கொல்கத்தாவில் உள்ள அலிப்பூர் தனி நீதிமன்றத்தில் கோஷ் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார். அவரை 14 நாட்கள் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

அவரை டாக்டர்கள் பரிசோதனை செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதபதி கூறினார். இதையடுத்து கொல்கத்தா சிறையில் கோஷ் அடைக்கப்பட்டார்.

நீதிமன்ற வளாகத்தில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்த கோஷ் என் வயிற்றில் உள்ள கத்தியால் எந்தப்பிரச்சினையும் இல்லை . ன் நினைத்தால் ஆபரேஷன் இல்லா மல் யோக மூலம் அந்தக்கத்தியை எடுத்துவிடுவேன்என்றார்.(அ-5)

WORLD NEWS உலக தரிசனம்

# 120 வார்த்தைகளில் ஒரு புதிய மொழி

(வாஷிங்கடன்)

உலகில் உள்ள ஏராளமான மொழிகளில் அதிகளவில் வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. எழுதில் கருத்துக்களைப் பரிமாறும் வகையில் வெறும் 120 வார்த்தைகளுடன் புதிய மொழியை உருவாக்கியுள்ளார் சோஞ்சா எலன் கிசா .

கனடா, ரொன்டோவை சேர்ந்த 28 வயது பெண் சோஞ்சா எலன் கிசா அங்கு மொழி பெயர்பாளராக பணியாற்றுகிறார். பிரஞ்சு ,ஆங்கிலம், ஜெர்மன், லத்தீன், பில்லாந்தின் பின்னிஷ், வெல்ஷ் போன்ற மொழிகளை ஆராய்ந்தார். அத்தனை மொழி களில் இருந்தும் சில குறிப்பிட்ட வார்த்தைகள் மட்டுமே எடுத்து மொத்தம்120 வார்த்தைகளுடன் புதிய மொழியை வடிவமைத்துள்ளார்.

கடந்த 2001ஆம் ஆண்டில் இன்ரநெட்டில் இவரால் பரப்பப்பட்ட இந்த மொழியில் தற்போது 100ற்கும் மேற்பட்டோர் கவிதை எழுதுகின்றனர், பாடல்கள் இசைக்கின்றனர், இன்ரநெற்றில் இம்மொழியை பயன்படுத்தி பேசிக்கொள்கின்றனர்.

தனது மொழிக்கு டோகி போனா என்று பெயர் சூட்டியுள்ளார் எலன் கிசா. இதற்கு நல்ல மொழி என்று பொருள். இந்த. மொழியில் அலெ லி போனா என்றால் எல்லாமே நல்லபடியாக நடக்கும் என்று அர்த்தம் அதேபோல நல்ல நண்பர் என்பதை யான்போனா என்று குறிப்பிட வேண்டும். புதிதாக மொழியை உருவாக்க (www.Langmaker. Com என்ற வெப்சைட்டில் தோடிப் பார்க்கலாம். (அ-5)

# அந்தரத்தில் திருமணம்

(கன்மிங்)




சீனாவில் யன்னான் மாநிலத்தின் கன்மிங் நகரைச்சேர்ந்த ஜியாங் டெய் தம்பதிதான் இங்கே கயிற்றில் தொங் கியபடி திருமண மோதிரம் மாற்றிக்கொள்கிறது.

இரண்டு பேருமே கன்மிங் நகரில் உள் ஒரு நிறுவனத்தில் உயர்ந்த கட்டடங்களின் ஜன்னல்களை கயிற்றில் தொங்கியபடி சுத்தப்படுத்தும் பணியாற்றி வருகின்றனர்.

தங்கள் வேலையால் வாழ்க்கையில் இணைந்ததை நினைவுகூறும் வகையில் அதேபோல உயர்ந்த கட்டடத்தில் இருந்த கயிற்றில் தொங்கியபடி திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்து அதை செய்தும் காட்டினர். (அ-5)

# உலகின் மிகப்பெரிய வைரம் கண்டுபிடிப்பு



உலகிலேயே மிகப்பெரிய வைரத்தை கண்டுபிடித்துள்ளதாக தென்னாபிரிக்க சுரங்க கம்பனி ஒன்று உரிமை கோரியுள்ளது.

தென்னாபிரிக்காவின் வட மேற்கு மாகாணமொன்றில் அகழ்ந்து எடுக்கப்பட்ட இந்த 7ஆயிரம் கரட்ஸ் வைரமானது பிரித்தானிய முடியிலுள்ள பெறுமதிமிக்க குல்லினன் வைரத்திலும் இரு மடங்கு பெரியதாகும்.

இந்நிலையில் இந்த வைரமானது ஜொஹன்னெஸ் பேர்க்கில் உள்ள வங்கிக்கு அதன் பெறுமதியை மதிப்பிடுவதற்காக எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக மேற்படி சுரங்கத்தின் பங்காளரான பிரட் ஜொலி தெரிவித்தார்.

இந்த பச்சை நிற வைரமானது ஒரு தோங்காய் அளவு காணப்படுவதாகக்கூறப்படுகிறது . (அ-5)

# பேரக்குழந்தைகளுக்கு 2 கோடி செல்ல நாய்க்கு 50 கோடி சொத்து

## அமெரிக்க கோடீஸ்வரி உயில்

அமெரிக்காவின் நியோர்க்கை சேர்ந்த பெண் லியோனா ஹெம்ஸ்லி. இந்த பெண் ஒரு கோடீஸ்வரர். நியூயோர்கில் உள்ள ஆடம்பர ஓட்டல் மற்றும் ஏராளமான தொழில் நிறுவனங்களை நடத்திவந்தார்.

கடந்த வாரம் இந்த கோடீஸ்வர பெண் இறந்துவிட்டார். அவர் விட்டுச்சென்ற பல கோடி ரூபாய் சொத்தக்கள் யாருக்கு என்ற கேள்வி அவரது உறவிணர்களுக்கும், வாரிசுகளுக்கும் எழுந்தது. அவர் எழுதி வைத்த உயிலை படித்து பார்த்தார்கள் அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. நாய்கு ரூபாய் 50 கோடி சொத்து அந்த கோடீஸ்வர பெண் தனது செல்ல நாய்க்கு ரூ 50 கோடி சொத்துக்களை க்கொடுக்க உயில் எழுதிவைத்திருந்தார்.

அவர் செல்லமாக வளர்த்து வந்த அந்த நாயின் பெயர் டிரபிள் ஆங்கிலத்தில் தொல்லை என்று பொருள். ஆனால் அவரது உறவினர்களுக்கு தான் அந்த நாய் இப்போது தொல்லையாக வந்துவிட்டது. லியோனாவின் கணவரும் இறந்துவிட்டார். அந்த நாயை பராமரிக்கும் உதவியாளருக்கு ரூபாய் 1 கோடி கொடுக்க லியோனா தனது உயிலில் கூறி இருக்கிறார். தனது 2 பேரக்குழந்தைகளுக்கு ரூபாய் 2கோடியை மட்டும் அவர் எழுதி வைத்திருக்கிறார். அதுமட்டுமல்ல அந்த செல்ல நாய் இறந்து விட்டால் தனது கல்லறை அருகிலேயே அந்த நாயையும் புதைக்க வேண்டும் என்று அவர் எழுதி வைத்திருக்கிறார். தனது மகனுக்கும் லியோனா ஒரு சிறு தொகையை ஒதுக்கியிருக்கிறார். (அ-5)

# கடிகார மாளிகை



சீனாவில் ஷென்யாங் நகரில் உள்ள பழைய கடிகார மியூசியம் இது. அங்கு ஒரு கடிகாரத்தை எடுத்துச் செல்கிறார் ஊழியர் ஒருவர்.

இந்த மியூசியம் அரசுக்கு சொந்தமானது அல்ல லிடாவோ அவரது தந்தை லி டைஜன் ஆகியோருக்கு சொந்தமானது. இவர்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக சீனா முழுவதும் சுற்றி அலைந்து 2000க்கும் அதிகமான பழைய கடிகாரங்களை வாங்கியுள்ளனர். இது பார்வையாளர்களை பெரிதும் பரவசப்படுத்துகிறதாம். (அ-5)

# ஆட்கடத்தல், கப்பம், ஈடுபடுவது யார்? விமானப்படை அதிகாரி வாக்கு மூலம்

## சண்டே லீடர் வார ஏடு விபரிப்பு

ஸ்ரீலங்கா இராணுவமும் அதனுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவான கருணா குழுவும் இணைந்து கடத்தல்களை மேற்கொண்டது குறித்து கடத்தல் சம்பவங்களில் தொடர்புடைய விமானப்படைஅதிகாரி தேசப்பிரிய விரிவான வாக்குமூலம் ஒன்றை அளித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் வார ஏடு தெரிவித்துள்ளது.

சண்டேலீடரில்வெளியானசெய்தியின்தமிழ் வடிவம்கடந்த ஜுன் 21ஆம் நாள் குற் றப்புலனாய்வுப் பிரிவினர் விமானப்படை முன் னால் ஸ்குவான்ரன் லீடரான நிசந்த கஜநாயக்காவை கைது செய்திருந்தனர். அவர் மக்களை கடத்தி பல மில்லியன் ரூபாய்களை கப்பமாக பெற்றதுடன், துணை இராணுவக் குழுவான கருணா குழுவுடனும் அந்த குழுவின் உறுப்பினர்களுடனும் நெருங்கிய தொடர்புகளை உடையவர்.

கடத்தல்களில் கஜநாயக்கவிற்கு உள்ள தொடர்புகளை ஐக்கிய தேசியக்கட்சியின் மூத்த நாடாளுமன்றஉறுப்பினரான லக்ஸ்மன் செனிவிரட்ன முதலில் வெளிக் கொண்டு வந்திந்தார். ஜுன் 6 ஆம்நாள் நாடாளுமன்றத்தில் அவர் இதனை அம்பலப்படுத்தினார்.

### ஹொலிடே இன்னில் தங்கியிருந்த கஜநாயக்க

கஜநாயக்க பாதுகாப்பு வட்டாரங்களின் ஆசிர்வாதத்துடன் கடத்தல்களில் ஈடுபடுவதாகவும், அவர் 'ஹொலிடே இன்' விடுதியில் உள்ள 706ஆம் அறையில் தங்கியிருந்து விடுதியின் முகாமைத்துவத்திற்கு தெரியாது தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் செனிவிரத்ன தெரிவித்திருந்தார்.

எனினும் கடத்தல்களை அரசு மறுத்ததுடன் நாடாளுமன்றத்தை செனிவிரத்ன தவறாக வழி நடத்துவதாகவும் தெரிவித்திருந்தது. எனினும் தரவுகளின் படி நாட்டில் கடத்தல்களும் படுகொலைகளும் நாள் ஒன்றுக்கு 6 ஆக அதிகரித்திருந்தன.

அதே சமயம் செனிவிரத்தினவின் அறிக்கையின் 3 நாட்களின் பின்னரும் அவருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான எதிர்நடவடிக்கை யின் பின்னரும் அரசின் நடவடிக்கைகள் ஆட்டம் கண்டன.

கஜநாயக்க கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் சதி நடவடிக்கைகளில் ஈடுபட்ட படையினர் மற்றும் கருணா குழு தொடர்பான தகவல்கள் வெளிவரத்தொடங்கின.

கிழக்கு விடுக்கப்பட்டதோ இல்லையோ அங்கு சட்டத்திற்கு முரணான ஆயுதம் தாங்கிய கருணா குழு உறுப்பினர்களும் அரச படையினரும் கைகோர்த்துக்கொண்டு உலா வருவது உறுதியானது. கொழும்பு உட்பட பல பகுதிகளில் நடைபெறும் படுகொலைகள், கடத்தல்களில் கருணா குழுவினரினதும் படையினரினதும் தொடர்புகள் இருப்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

### மங்கள மீதான சதி

தற்போது மனித உரிமை மீறல்கள் . பொருளாதார நெருக்கடி , அரசியல் பலவீனம் போன்றவற்றில் அரசு சிக்கியுள்ள நிலையில் அதன் இரகசிய செயற்பாடுகள் வெளிவருகின்றன. இந்த நிலையில் முன்னாள் விமானப்போக்குவரத்து தலைவர் ரிரான் அலஸ், முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும்சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் விடுதலைப்புலிகளுக்கு 30 இலட்சம் ரூபாய்களுக்கு மூன்று ஏவுகணைகளை வழங்கியுள்ளனர். என கூறிவிட்டால் இந்த கடத்தல்களில் ஈடுபட்ட ஒருவரின் தண்டணையை நீக்கிவிடுவதாக அதிகாரிகள் பேரம் பேசியதாக தெரியவந்துள்ளது.

துறைமுகம் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சராக மங்கள சமரவீர இருந்த போது அவரது வாகனங்களில் ஒன்றில் வன்னிக்கு ஏவுகணைகளை கொண்டு சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளித்ததாகவும் அதற்காக 30 இலட்சங்களை பெற்றுக்கொண்டதாகவும் அதன் பின்னர் வாகனம் கொள்ளையிடப்பட்டதாக காட்டப்பட்ட தாகவும் அறிக்கையை பதிவு செய்வதற்கும் அரசு தரப்பு முயன்று வருகின்றது. இது கடத்தல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை கஜநாயக்க தெரிவிக்கும போது அதனை நடுநிலைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட வுள்ள கதையாகும். இந்த கடத்தல்களில் சம்பந்தப்பட்ட மற்றுமொரு விமானப்படை அதிகாரியை மங்களவிற்கு எதிரான குற்றச் சாட்டுக்களுக்கு பயன்படுத்த முயற்சி எடுக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைக்ககாக பயன்படுத்தப்பட்ட விமானப்படை சார்ஜன் கொடித்துவக்கு முடியன் சிலகே, சமன்கேமந்த, தேசப்பிரிய என்பவர் திருமண உறவின் மூலமாக கருணாவுக்கு நெருங்கிய உறவுக்காரர் ஆவார். கஜநாயக்காவுக்கு தேசப்பிரிய நெருங்கியவர். இவர்கள் அனைவரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தெரிவித்தவர்கள்.

ரிரா்ன் அலசுடன் பேசி கஜநாயக்கவுக்கு விமான நிலைய பாதுகாப்பு பிரிவில் ஒரு உயர்ந்த வேலை வாங்கி கொடுக்கும் படி கோத்தபாய தன்னிடம் கூறியதாக சிறீபதி தெரிவித்திருந்தார். ஆனால் ரிரான் அதனை புறக்கணித்துவிட்டார்.

சிறீபதி கடந்த பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் சிறீபதியையும் கருணாவையும் இணைத்து தேசப்பிரியவிற்கு குற்றப்புலனாய்வு பிரிவிற்கு வழங்கியிருந்தார்.

எனினும் அதில் சிறீபதி பெயருடன் கோத்தபாயவின் பெயரும் இருந்ததால் அரசிற்கே அது நெருக்கடியாகிவிட்டது. பின்னர் இந்த வழக்கு

சேர்க்கப்பட்டு விட்டது. கடத்தல்கள் தொடர்பான குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட கைதுகள் ராஜபக்ஷாக்கள் தங்களை காப்பாற்றிக்கொள்ள என்பதற்கு அப்பால்தாம்நடவடிக்கை எடுப்பதாக அனைத்துலக சமூகத்தை நம்பவைக்கவும் எடுக்கப்பட்ட முயற்சியாகும்.

எனினும் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் இருப்பவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல்களினால் இந்த கடத்தல் சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

எப்போதும் திருடர்களிடம் நேர்மை இருக்கப்பபோவதில்லை என்பது உண்மை. அதனால், ஒவ்வொருவரும் மற்றவர் மீது கடத்தல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பாக குற்றம் சுமத்தி வருவதனால் கருணா குழுவினருக்கும் படையினருக்கும் இடையில் உள்ள தொடர்புகள் அம்பலமாகியுள்ளது.

### யார் இந்ததேசப்பிரிய?

இலக்கம் 440-2 தெகிவளை வீதி, கண்டலியடே பலுவ,கடவத்தை என்னும் முகவரியைக் கொண்ட 38 வயதான தசப்பிரிய குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் கஜநாயக்க உட்பட பலர் தொடர்பாக பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். இரத்மலானை விமானப்படைத்தளத்தில் பணியாற்றிய இவர் 2004ஆம் ஆண்டு அப்போது விமானப் படைத்தளபதியாக இருந்த டொனால்ட் பெரேரா்வின் உத்தியோக பூர்வ இல்லத்திற்கு மாற்றப்பட்டிருந்தார். அப்போது விங் கொமாண்டராக இருந்த கஜநாயக்க அவரது பாதுகாப்பு அதிகாரியாக இருந்தார். பின்னர் கடந்த வருடம் ஓய்வு பெற்றார். தேசப்பிரியவை தளபதியின் பாதுகாப்பு பிரிவின் புலனாய்வு அதிகாரியாக கஜநாயக்க நியமித்தார். தளபதியின் இல்ல சுற்றாடலில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களை தடுப்பதே தேசப்பிரியவின் பிரதான பணியாகும்.

### அதிர்ச்சிகரமான தகவல்கள்

குற்றப்புலனாய்வுப்பிரிவினரின் விசாரணைகளின் போது தேசப்பிரிய கூறிய மிகவும் அதிர்ச்சிகரமான தகவல்கள் பின்வரு மாறு?

விமானப்படைத்தளபதியின் இல்லத்தில் நான் எனது மூன்று மாதகால பணியை நிறைவு செய்தபோது எஸ்.பி.தீஸநாயக்கா விவசா்யத்துறை அமைச்சராக இருந்தார். மட்டக்களப்பைச் சேர்ந்த சில தமிழ் இளைஞர்கள் பங்குபற்றிய விழா ஒன்று அவரது வீட்டில் நிகழ்ந்தது. அது டொனாட் பெரேராவின் இல்லத்திற்கு அருகில் இருந்தது. விழா அதிகாலை 2 மணிக்கு நிறைவு பெற்றது. அந்த சமயத்தில் ரூபன் என அழைக்கப் படும் கருணா குழுவைச்சேர்ந்த ஒருவருக்கு என்னுடன் பழக்கம் ஏற்பட்டது. ரூபன் என்னிடம் தனது தொலைபேசி எண்ணையும் தந்தார். தான் க்ருணா குழுவின் உறுப்பினர் எனவும் தன்னை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைப்பதற்கு உதவுமாறும் ரூபன் என்னிடம் கேட்டிருந்தார். நான் இந்த செய்தியை விங் கொமண்டர் கஜநாயக்காவிடம் தெரிவித்தேன். ரூபனின் தொலைபேசி இலக்கத்தையும் அவரிடம் கொடுத்தேன்.

### கருணா குழுவுடன் ஏற்பட்ட இணைப்பு

ரூபன் உண்மையில் கருணா குழு உறுப்பினர் தானா என அறிவதற்கு கஜநாயக்க கருணா குழுவின் இரண்டாம் தலைவரான குபேரனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். இது அவர் கருணா குழுவுடன் நெருங்கி பணியாற்றி வருவதை எடுத்துக் காட்டியுள்ளது. ரூபன் கருணா குழு உறுப்பினர் தான் என அறிந்ததும் அவரை வெளிநாடு அனுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் கஜநாயக்கவும் நானும் அவரை வானூர்தி நிலையத்தில் கொண்டு சென்றுவிட்டோம். அதன் பின்னர் எனக்கு குபேரனின் தொலைபேசி இலக்கம் கிடைத்தது. குபேரன் எனக்கு கருணா குழுவைச்சேர்ந்த சுமன், சரன், மார்க்கன் ஆகியோரை அறிமுகப்படுத்தினார்.

இவர்கள் மூவரும் தாங்கள் அரசியல் வட்டாரங்களில் பிரவேசிக்க உதவுமாறு என்னை கேட்டிருந்தனர். இது தொடர்பாக நான் எனது உயர் அதிகாரியான கஜநாயக்கவை நாடியிருந்தேன். அவரும் சம்மதித் திருந்தார். பின்னர் அவர்கள் தமக்கு அரசியல் பிரவேசத்திற்கான உதவிகள் வேண்டாம். கொழும்பில் ஒரு நல்ல வீடு எடுப்பதற்கு உதவும் படி கேட்டிருந்தனர். மீண்டும் நான் எனது உயர் அதிகாரியை நாடினேன். அவரும் சம்மதித்தார். பொரளையில் உள்ள விமான படையினரின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு அண்மையில் அவர் 7- 8 வீடுகளைப்பார்த்தார்.

பின்னர் பொரளையில் உள்ள மேஜர் கமகேயின் வீடு கஜநாயக்கவினால் தெரிவு செய்யப்பட்டது. ஒரு வாரத்தின் பின்னர் அது மாதம் 8ஆயிரம் ரூபாய் வாடகைக்கு எனது பெயரில் பெறப்பட்டது. உடனடியாகவே அந்த வீடு கருணா குழுவினரால் பயன்படுத்தப்பட்டது. விஜேனாத், அல்பா, சுனாமி மல்லி ஆகியோர் அந்த வீட்டிற்கு குடிவந்தனர்.

### உழவு இயந்திர முதலாளி கடத்தல்

அதன் சிறிது காலத்தின் பின்னர் கொழும்பில் விடுதலைப்புலிகளின் நடமாட்டங்களை அவதானித்த கஜநாயக்க அவர்களை அகற்ற கருணாகுழுவின் குபேரனின் உதவியை நாடுமாறு என்னைப்பணித்தார். உழவு இயந் திரங்களின் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யும் முதலாளி ஒருவர் விடுதலைப் புலிகளுக்கு உதவி வருவதாக குபேரன் எனக்கு தெரிவித்தார். (தொடரும்)

# யுத்தத்தில் ஈடுபடாதவர்கள் அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்தி நீதி நிலைநாட்டப்பட வேண்டும்

## வவு.மாவட்ட நீதிபதி மா.இளஞ்செழியன் வேண்டுகோள்

யுத்தத்தை நிறுத்த முடியாவிட்டாலும் யுத்தத்தில் ஈடுபடாதவர்கள் அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்த முடியும் என வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார். இனம், மதம் பாராது நீதி நிலைநாட்டப் பட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

வவுனியா பிரதேச கலை இலக்கியப் பெருவிழா வவுனியா நகர மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அங்கு கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். பிரதேச செயலாளர் செல்வி துரைசாமி தலைமையில் இடம்பெற்ற கலைவிழாவில் நீதிபதி இளஞ்செழியன் மேலும் உரையாற்று கையில், யுத்தம் நடைபெறுவதாகக் கூறி எமது கலை, கலாசார நிகழ்வுகளை நிகழ்த்தாமல் விட்டுவிட முடியாது. தமிழர் கலை கலாசாரத்தை பேணிப் பாதுகாக்க இவ்வாறான கலை இலக்கிய விழாக்கள் பெரிதும் உதவுகின்றன.

வவுனியாவில் கடந்த மூன்று வருடங்களாக பல படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. போரில் சம்பந்தப்படாத, தொடர்பில்லாத அப்பாவிகள், இளைஞர்கள் அநியாயமாகக் கொல்லப்படுகின்றனர். நீதிபதி அலுவலகக் கடமைகளுக்கு மேலாக தினம் அநியாயமாகக் கொல்லப்பட்ட இளைஞர்களின் சடலங்களை நான் பார்வையிட்டு விசாரணை நடத்த வேண்டியுள்ளது.

இனம், மதம் பாராது நீதி நிலை நாட்டப்பட வேண்டும். தமிழர், சிங்களவர், முஸ்லிம் என பேதங்களின்றி சட்டத்தின் முன் சகலருக்கும் சமம் என்ற அடிப்படையில் பயமின்றி எனது கட மைகளைச் செய்து வருகின்றேன். போரில் சம்பந்தப்படாத அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுவதை அனுமதிக்க முடியாது என்றார்.

பிரதேச செயலாளர் துரைசாமி உரையாற்றுகையில், கலை இலக்கிய விழாக்களை நடத்துவதன் மூலம் இலை மறை காயாக இருக்கும் கலைஞர்களை வெளிக் கொணர முடியும் என்றார். பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சி.சண்முகம் கலந்து கொண்டார். (அ-5)



யாழ். பிறவுண் வீதியில் இயங்கும் எவர்சைன் சிறுவர் உலகம் முன் பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் எவர்சைன் இயக்குநர் செ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் . இந்து ஆரம்பப்பாடசாலை பிரதி அதிபர் து. தியாகலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட தியாகர்ாசா மகா வித்தியால அதிபர் ந.கணேசமூர்த்தி, சமூக சேவை மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

ஒருவன் தன்னை அறிஞன் என்று நினைக்கிறான். அதனால்தான் உலகில் இத்தனை முட்டாள்கள் இருக்கிறார்கள்.
- அங்கேரி

வலம்புரி

# ரணில்-சந்திரிகா சந்திப்பு ஆட்சி மாற்றத்தின் அறிகுறியா?

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அரசியலில் நிரந்தர நட்புமில்லை. நிரந்தரப்பகையுமில்லை என்ற கூற்றுக்கு மேற்படி சந்திப்பு நல்லதோர் உதாரணமாயினும் இருவரினதும் சந்திப்பு அரசியல் புலத்தில் முக்கியமானதொரு விடயமாக கருதப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ, தேர்தலில் வெற்றி பெற்றதும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை தூக்கியெறிந்து விட்டார்.

அதுமட்டுமன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், பண்டாரநாயக்க குடும்பத்திற்கும் இடையிலான பாரம்பரிய உறவை வேரோடு பிடுங்கிவிட்டார். இது சந்திரிகா குமாரதுங்கவிற்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் புரிந்துணர்வு உடன்பாடொன்றை செய்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறாக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களை தம்பக்கம் இழுத்துக் கொண்டார்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் குறைந்து போனதுடன், ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைப் பதவிக்கும் ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவானது.

சேர்ந்திருந்து கழுத்தறுக்கும் செயலை ஜனாதிபதி மகிந்த செய்துவிட்டதாக கருதிய ரணில் விக்கிரமசிங்க, இழந்துபோன தனது அரசியல் கௌரவத்தை மீட்டெடுப்பதற்கும், தனது கட்சியிலிருந்து அரசுக்கு தாவியவர்களுக்கும் பாடம் படிப்பிக்கவும் மகிந்தவின் அரசைக் கவிழ்ப்பதே ஒரே வழி என்ற முடிவை எடுத்துள்ளார்.

ரணிலின் மேற்போந்த முடிபை அரங்கேற்றுவதற்கு, ஏற்ற துணை இல்லாது தவித்தவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோரின் அமைச்சுப் பதவிகளை பறித்து வெறுவிலியாக்கினார்.

என் எதிரியின் எதிரி எனக்கு நண்பனென்ற தேற்றத்தைப் பயன்படுத்திய ரணில் விக்கிரமசிங்க; மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சி ஆகியோரை தன்னுடன் கூட்டுச் சேர்த்தார்.

மங்கள சமரவீரவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள்பிரிவும், ஐக்கியதேசியக்கட்சியின் கூட்டும் சேர்ந்ததன் விளைவாக அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி, கருக்கட்டி உயிர்ப்பும் பெற்றது.

இப்போது ரணிலும், சந்திரிகா குமாரதுங்கவும் சந்தித்து ஆட்சி மாற்றம் பற்றிப்பேசியுள்ளார்கள்.

ரணில் -மங்கள கூட்டில் சந்திரிகா இணைப்பாளர் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆக இரு துருவங்களாக இருந்த ரணிலும், சந்திரிகாவும் ஒருவரை ஒருவர் நேரடியாகப் பார்த்தது - பேசியது ஜனாதிபதி மகிந்தவின் ராசிக்கு பாதகமாக அமையலாம் என்றே தெரிகிறது.

# பல்கலை அனுமதிப் பிரச்சினைக்கு தீர்வின்றேல் அடுத்த வாரம் போராட்டம் ஆரம்பமாகும்

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்

கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு இந்த வாரத்துக்குள் தீர்வு கிடைக்காவிடின் அடுத்த வாரம் பாரிய போராட் டங்களை நடத்துவோம் என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை தெரிவித்துள்ளது.

உயர்தரப் பாடசாலையில் அதிகூடிய புள்ளிகளை பெற்று பல்கலைக் கழகங்களுக்கு தெரிவான 164 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் வெளிநாட்டு மாணவர்களுக்கு இங்குள்ள பல்கலைக்கழகங்களில் தாராளமாக அனுமதி வழங்கப்படுகின்றது என்றும் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் துமிந்த நாகமுவ கூறியதாவது, உயர்தரப் பரீட்சையில் 3 ஏ பெறுபேறான அதிகூடிய புள்ளிகளை பெற்று தெரிவான 164 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக விசாரித்தால் புள்ளிகள் வழங்கப்பட்ட முறைகளில் பிழைகள் இருப்பதாகவும் மாணவர்கள் விண்ணப்பங்களை சரியான முறையில் சமர்ப்பிக்கவில்லையென்றும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுகின்றன.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கான பொறுப்பை கல்வியமைச்சு ஏற்க வேண்டும். கல்விக்கென்று ஆறு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் பிரச்சினை இல்லை என்கின்றார்கள். ஒருசிலர் இராஜினாமாச் செய்யப்போவதாக தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் விரிவுரையாளர்களின்மை, அடிப்படை வசதிகளின்மை, விடுதிவசதியின்மை உட்பட கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகளை ஜனாதிபதியிடம் முறையிடச் சென்றால் கண்ணீர்ப்புகை குண்டுத் தாக்குதலும் அடியும் உதையும்தான் கிடைக்கின்றது.

இலங்கையில் அதிகூடிய புள்ளிகளுடன் தெரிவான மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் அனுமதியை வழங்காத அர சாங்கம் இங்குள்ள பல்கலைக்கழகங்களில் கலைப்பீடத்திற்கு 6 ஆயிரம் வெளிநாட்டு மாணவர்களை அனுமதிக்க போகிறது. இதுவரையில் வெளிநாட்டு மாணவர்கள் 300 பேருக்கே இங்கு அனுமதியளிக்கப்பட்டு அதுவும் இலங்கை மாணவர்கள் 300 பேருக்கு வெளிநாடுகளில் அனுமதியளிக்கும் ஒத்துமாறல் முறையிலேயே இது மேற்கொள்ளப்பட்டு வந்தது.

பல்கலைக்கழகங்களிலும் கல்வித்துறையிலும் இது போன்ற பல நெருக்கடிகள் தோன்றியுள்ளன. ஆனால் அரசாங்கம் எதையுமே கண்டுகொள்ளாது அமைதியாக இருக்கின்றது. எனவே இந்த நெருக்கடிகளுக்கெல்லாம் இவ்வார இறுதிக்குள் தீர்வு கிடைக்காவிடில் அடுத்த வாரம் போராட்டங்களை முன்னெடுப்போம் என்றார். (அ-5)

# இன,மத பேதமின்றிப் பொலிஸ் பதிவுகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க அறிவிப்பு

எதிர்காலத்தில் மதம், மொழி, இனப்பாகு பாடுகளின்றி பொலிஸ் பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்ற இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க பொலிஸ் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக இடர்முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை விபரம் பின் வருமாறு, அவசரகால ஒழுங்கு விதிகளின் 23 அம் ஒழுங்க விதியின் கீழ் வீடுகளிலுள்ளவர்களைப் பதிவு செய்வதற்கென கையாளப்படும் வெவ்வேறு நடைமுறைகள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சுக்கு குடியியல் சமுதாயக் குழுக்களிடமிருந்து பலமுறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. பதிவு செய்வ தற்கு ஒரே சீரான முறைமையொன்று நாடுமுழுவதும் நடை முறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் பணிப்புரைகள் வழங்கப்படுவதனை இயலச் செய்வதற்கு சட்டத்துறை, தலைமையதிபதி திணைக்களத்துடனும் பொலிஸ் திணைக்களத்துடனுமான கலந்துதாலோசனையுடன் அமைச்சு தொடக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த முறைப்பாடுகள் (2006 ஜூன் மாதம் திருத்தப் பட்டவாறான) அவசரகால ஒழுங்கு விதிகளின் 23 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் பதிவு செய்யும் முறையில் சில சிக்கல் களைக் சுட்டிக்காட்டின.

அவ்வொழுங்கு விதியாவன,

1. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒவ்வொருவரும் குடியிருப்பாளரின் வீட்டில் வதியும் எல்லா ஆட்களினதும் பெயர்களைக் கொண்ட நிரலொன்றைத் தமக்குத் கொடுத் துதவுமாறு தமது பொலிஸ் நிலைய இடப்பரப் பினுள் வதியும் குடியிருப்பாளர் ஒவ்வொருவரையும் பணிக்கலாம். அத்தகைய நிரலில் குடியிருப்பாளரின் குடும்ப உறுப்பினர்கள் தற்காலிக மாகவோ அல்லது நிரந்தரமாகவோ குடியிருக்கக்கூடிய வேறு குடியிருப் பாளர்களிலும் வேலையாட்களிலுமிருந்து பிரித் துக்காட்டப் படுதல் வேண்டும்.

மேலும் அவர் மேற் கூறப்பட்ட பொலிஸ் அலுவலரால் அவ்வாறு பணிக்கப்படின் அவ ரால் கொடுத்துதவப்பட்ட நிரலில் ஏதேனும் அதிகரிப்பு அல்லது குறைப்பு அல்லது மாற்றம் பற்றி காலத்துக்கு காலம் அறிவித்தல் வேண்டும்.

2. ஓராம் உட்பிரிவின் கீழ் பணிப்புரை யொன்று கிடைக்கப் பெற்ற குடியிருப்பாளர் எவரும் அவரது வீட்டில் அறிமுக மற்ற ஒருவர் இருக்கின்றார் என்ற நிகழ்வைப் பற்றி மேற் கூறப்பட்ட பொறுப்பலுவலருக்கு அறிவிக்காமல் அத்தகைய அறிமுக மற்றவருக்கு புகலிடமளித்தலாகாது

3. ஓராம் (2) ஆம் பந்திகளின் கீழ் தகவலைக் கொடுத்துதவுமாறு பணிக்கப்பட்ட வரும் அத் தகைய பணிப்புடன் இணங்கியொழுகத்தவறுகின்ற குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் தவறு ஒன்றுக்குப் குற்றவாளியாதல் வேண்டும்.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க அவரது தலைமையிலான அவரது மதிப்புரைக்குழுவின் முன்னிலையிலும் மனித உரிமைகள் மீது அமைச்சுக்களுக்கிடையிலான குழுவின் முன்னிலையிலும் முன்வைத்ததையடுத்து முன்னைய நடவடிக்கை முறையை மாற்றுவதற்கான நடவடிக்கையை ஆரம்பித்து வைப் பதற்கென இக்குழுக்களில் உள்ள பொலிஸ் பிரதிநிதி களால் வழி முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பில் சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத் திடமிருந்து மதிப்புரை கோரப்பட்டது.

சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களம் பிரேரிக்கப் பட்ட வழிமுறைகளில் அரசியல் அமைப்பு சார்ந்ததும் சட்டம் சார்ந்ததுமான அம்சங்கள் பற்றி மதியுரை வழங்கியது. அமைச்சர் முன்னைய முறைமையின் கீழுள்ள முரண்பாடுகளுக்கு கவனம் செலுத்துவதற்கு பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட துரித நடவடிக்கையை பாராட்டியதுடன் ம.உ.அ. குழுவுக்கு பொலிஸ் பரிசேதாகர் தலைமை அதிபதிக்கும் சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்திற்கும் அளிக்கப்பட்ட ஒத்துழைப்புக்கு அவரது பாராட்டையும் தெரிவித்தார். வருங்காலத்தில் நாட்டி னம், இன ரீதியிலான பூர்வாங்கம் மதம், மொழி அல்லது வேறு விவரங்கள் என்பவற்றை பொருட்படுத்தாமல் ஒவ்வொரு வீட்டில் இருந்தும் வீட்டிலுள்ளவர்களின் விபரங்கள் திரட்டப்படும் என்பதனையிட்டு அமைச் சர் திருப்தி தெரிவித்தார்.

இதன் பின்னர் ,முன்வைக்குமாறு தேவைப்படுத்தப்படும் ஒரேயெரு தகவல்யாதெனில் பிரதம குடியிருப்பாளரின் பெயர், ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி பிரதம குடியிருப்பாளர்களின் குடும்ப அங்கத்தவர்களின் பெயர்கள், வயது அவர்களதுஅடையாள அட்டை இலக்கம் பிரதம குடி யிருப்பாளருடனான உறவு முறை என்பன மாத்திரமே வீட்டு உதவியாளர்கள் உட்பட தற்காலிக குடியிருப்பாளர்களின் விபரங்களும் வழங்கப்படுதல் வேண்டும். இந்த விபரங்களை சேகரிப்பதில் உள்ளூராட்சிமன்ற அலுவலர்கள் உதவிபுரிவர் வழங்கப்பட்ட விபரங்களுக்கான திருத்தம் இசைவான பொலிஸ் நிலையத்தில் பொறுப்பு அலுவலருக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம். பின்னபற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையின் விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்றை பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி அவரது திணைக்கள அலுவலர்களுக்கு அனுப்பியுள்ளார். இத்தகவலை அண்மைய எதிர்காலத்தில் பரப்புவதற்கு நாடளாவிய ரீதியில் பொதுமக்களின் விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகளை தொடங்கி வைப்பதன் மூலம் பரந்தளவில் பிரசாரம் செய்யுமாறு அமைச்சர் சமரசிங்க அனர்த்த நிவாரணமுகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் அலுவலர்களைபணித்துள்ளார்.(அ-5)

# வெள்ளி நற்சிந்தனை 32

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

நாம் வாழுகின்ற உலகத்திலே வியக்கத்தக்க நிலைகள் பல உண்டு. அவற்றைப் பற்றி அறிய வேண்டும். இயற்கை நிலையிலும் செயற்கை நிலையிலும் காணுகின்ற தோற்றங்களை நாம் உன்னிப்பாக பார்ப்பதில்லை. அது மிகத் தவறு. எம் எதிரே தோன்றுவதைச் சற்று நின்று நிதானித்து நோக்க வேண்டும்.

நிலத்தின் தன்மைக்கேற்ப நீர் சுவையானதாக இருக்கிறது. கொடை வழங்கும் இயல்பால் நல்லவர்களுடைய குணத்தை அறிந்து கொள்ளமுடியும். பிறரை கருணையோடு பார்க்கும் கண்கள் பெருமைக்குரியவை. பெண்களுடைய கற்பு நிலை தவறாத வாழ்வியல் அவர்களுடைய நேர்மையை உணர்த்தும். இத் தகைய விடயங்களே உலகத்திலே வியக்கத்தக்கவை எனப் பெரியோர்கள் கூறியுள்ளனர். நிலமும் கொடையும் பெண்மையும் பிறரை வாழவைக்கும். வளமான நிலமிருந்தால் வாழ்வும் செழிக்கும். பொருட் கொடையாளர்களின் கொடை பிறரை வாழவைக்கும். கருணைமிகுந்த பார்வையால் ஒருவருடைய கவலையைத் தீர்க்க முடியும். பிறருடைய அன்பான நோக்கு சோகவயப்பட்டவரை மீட்கும் அருமருந்து. சமூகத்திலே பெண்களுடைய செம்மை திறம்பாத சொல்லறந்தான் எல்லோரையும் உயர்ந்த நிலையில் வாழவைக்கும்.

மேற்சொல்லப்பட்ட நான்கு பண்புகளையும் நாம் விரிவாக உற்று நோக்க வேண்டும். எல்லாவற்றிலும் பிரிவு என்னும் உணர்வே ஓங்கி நிற்கிறது. கடல் சூழ்ந்த நிலவுலகில் வாழ்க்கையை மேம்படுத்த பாடுபடுகின்ற பெண்மையைப் போற்றாதவர்கள் யாருமில்லை. நான்கு பண்புகளையும் பெண் தன்னகத்தே கொண்டுள்ளாள் . இதனால் தமிழர் பண்பாட்டில் பெண்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

தெய்வமாகப் போற்றப்படுகிறாள். பெண்ணின் நேர்மை பலருக்குக் கவசமாகவும் அன்று விளங்கியது. நிலத்தின் பண்பையும் நீரின் தன்மையையும் பெண்ணே தன்னகத்துக் கொண்டிருந்தாள். அதனால் அவளே இல்லாள் எனப் போற்றப்பட்டாள்.

கடலாற் சூழப்பட்ட உலகத்திலே என்னதான் வியப்பாக இருக்கிறது என்று ஆராயும் இக்காலத்தில் இதனைத் தெளிவாக நாலடிகளில் சிறப்பாக ஒரு பாடல் விளக்கிக் காட்டுகிறது. அப் பாடல் கையடக்க தொலைபேசியைப் போலத் தொடர்பாடலை நம்மிடையே ஏற்படுத்தும் நயமுடையது. பாடல் இதோ!

*தண்ணீர் நில நலத்தால் தக்கதோர் குணம் கொடையால்*
*கண் நீர்மை மாறா கருணையால் – பெண்ணீர்மை*
*கற்பு அழியா ஆற்றலால் கடல் சூழ்ந்த வையகத்துள்*
*அற்புதமாம் என்றே அறி.*

(நல்வழி : 16)

# கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீட்டினை நிறுத்த வேண்டுகோள்

கிழக்கு மாகாணத்தில் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் குடிசன மதிப்பீட்டு நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்ட நிலையில் குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதானது கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இனவிகிதாசாரத்தை திட்டமிட்டு குறைக்கும் முயற்சி எனவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு மேலும் தெரிவித்துள்ளதாவது, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மூலம் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் வரையான மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்கின்றனர்.

அவர்களில் சுமார் 75 ஆயிரம் வரையான மக்களே மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர். ஏனையவர்கள் நலன்புரி நிலையங்களிலும் மற்றும் ஏனைய மாவட்டங்களிலும் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். வேறு சிலர் கொழும்பிலும் வாழ்கின்றனர். சுமார் 25 ஆயிரம் மக்கள் இந்தியாவுக்கு சென்றுள்ளனர். இந்த நிலையில் அங்கு நியாயமான நீதியான குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ள முடியாது.

உண்மையில் இராணுவ நடவடிக்கை மூலம் கிழக்கு மாகாணத்திலிருந்து எத்தனை தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன என்பதை மதிப்பிடுவதற்காகவே குடிசன மதிப்பீடு இடம் பெறுகின்றதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது. அரசாங்கம் உடனடியாக குடிசன மதிப்பீட்டு பணியை நிறுத்த வேண்டும். இல்லையேல் திட்டமிடப்பட்ட இன விகிதாசார குறைப்பு நடவடிக்கையாகவே தமிழ் மக்கள் இதனை கருதுவார்கள்.

1981ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் பிரகாரமே 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது வாக்காளர் அட்டைகள் வழங்கப்பட்டன. 1990 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டை தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்தமையினால் அது பின்னர் கைவிடப்பட்டது. தற்போது கிழக்கு மாகாணம் முற்று முழுதாக இராணுவ மயமாக்கப்பட்ட நிலையில் அங்கு சிவில் நிர்வாகம் இடம்பெறாத நிலையில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. (எ-1)

## அரசாங்கத்திற்கு கடன்...

ஆர்ப்பாட்டத்திற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தலைமை வகித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தால் தற்போதைய அரசாங்கத்திற்கு வழங்கப்படும் கடன்களை மீளளிக்கப் போவதில்லை என்று ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டு கோளை அந்த வங்கி பரீசிலிக்கவே இல்லை என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக ஐக்கிய தேசியகட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. ரணில் விடுத்த வேண்டுகோளை நிராகரித்துவிட்டு அரசாங்கத்திற்கு பணம் வழ... கக் கூடாது என்று ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற... வலியுறுத்தினர். (ச-5)

## பிரித்தானிய...

விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுவதால் அவை பரிசீலனை செய்வதற்கு விசேட கு... வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் விசா தொடர்பான ... கள் தற்போது கொழும்பு டுப்ளிகேசன் ... லுள்ள தனியார் முகவர் நிலையம் ஒன்றி... கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்ப... றது. (ச-...

## இறுதித் தீர்வு யோசனை...

முக்கிய விடயங்களில் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் அமைச்சர் திஸ்ஸ விதாரண தொடர்ந்தும் சர்வகட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் இறுதித் தீர்வு யோசனைகளை முன்வைத்து அதன் மூலம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய திட்டமொன்றை முன்னெடுக்கவிருப்ப... கவும் அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறின...

இதன் ஒரு கட்டமாகவே சர்வகட்சிப் ... நிதிகள் குழுவில் விவாதிக்கப்பட்ட பிரச்சினை... குரிய விடயங்கள் பற்றி பிரதமர் ரட்ணசிறி ... கிரமநாயக்க தலைமையில் ஆராயும் கட்... தலைவர்கள் கூட்டமொன்றை நடத்துமா... ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாக அமைச்... திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தார். (ச-...

## பிரி.யின் தீர்வுத்திட்டத்திற்கு...

சேர்ந்துள்ளது என்றார் அவர். பிரித்தானிய அரசாங்கத்தின் ஆதரவுடன் இலங்கைக்கான சமாதான திட்டத்தை அந்த நாட்டில் உள்ள மூன்று அமைப்புக்கள் இணைந்துதயாரித்துவருகின்றன.

இலங்கையின் அனுமதியின்றி இந்த தீர்வுத்திட்டம் தயாரிக்கப்படுகிறது. இதனால் நாட்டின் இறைமை கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளது. நோர்வேயை பயன்படுத்தி பிரபாகரன் மூலம் இலங்கையை துண்டாட மேற்குலகம் மேற்கொண்ட முயற்சிகள் பின்தள்ளப்பட்ட நிலையில் இப்போது பிரித்தானியா இதற்கான முயற்சியை தொடர்கிறது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையின் உதவியை பெற்று நோர்வே மூலம் மீண்டும் பேச்சு நடத்த பிரித்தானியா திட்டம் வகுத்துள்ளது. அது மட்டுமல்ல இராணுவத்தினருக்கு மனித உரிமை குறித்து கல்வி புகட்ட வேண்டுமாம். ஆயுதக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டுமாம். பிரித்தானியாவுக்கு என்ன உரிமை இருக்கிறது இது குறித்து கூறுவதற்கு?

இப்படி ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து இராணுவத்தினரையும் புலிகளையும் ஆயுத பலத்தில் சமப்படுத்தவே பிரித்தானியா முனைகிறது. அரசாங்கம் இது குறித்த கவனம் செலுத்தாது குருடனைப் போல உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி இதுதான் சந்தர்ப்பம் என்று ஆட்சியைக் கவிழ்க்க பார்க்கிறது. எனவே இந்த விடயம் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளோம் என்றார் அவர். (எ-1)

## அத்தாஸின் பாதுகாப்பு...

கேற்றோர் ஏந்தியிருந்ததோடு அரசாங்கத்துக்கு எதிராக முழக்கங்களையும் எழுப்பினர்.

அத்தாஸிற்கு வழங்கிய பாதுகாப்பை ஏன் விலக்கினீர்கள்? உங்களது ஊழலை மறைக்கவா? அரசே ஆட்சி நடத்துவது உனது உரிமை! எழுதுவது எமது உரிமை! ஊடகவியலாளர் மீது அசிட் வீசாதே! இங்கே நடப்பது ஹிட்லர் ஆட்சியா? போன்ற முழக்கங்களை ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டம் குறித்துக் கருத்துத் தெரிவித்த சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவர் சுனந்த தேசப்பிரிய, மிக் வானூர்தி கொள்வனவு ஊழலை அத்தாஸ் அம்பலப்படுத்தினார். அதனால் தான் அவருடைய பாதுகா... விலக்கப்பட்டு அச்சுறுத்தல் விடுக்க... வருகிறது.

ஆகையால் அவருக்கு உடனடியா... காப்பு மீண்டும் வழங்கப்படவேண்டும். ... சாங்கத்தின் இந்த செயற்பாடானது ஊட... வியலாளர்கள உண்மையை எழுதக்கூடாது... என்பதையே உணர்த்துகின்றது என்றா... இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சுதந்திர ஊட... அமைப்பு, தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய... முஸ்லிம் மீடியா போரம், உழைக்கும் பத்... கையாளர் சங்கம், பத்திரிகையாளர் தொழ... சங்கம் ஆகியன ஒன்றிணைந்து ஏற்பா... செய்திருந்தன. (எ-1)

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க...

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது. எனினும் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜே.வி.பி. என்பன அதற்கு தடையாகவுள்ளதாக அமைச்சரும் அரசாங்கத்தின் பிரதம கொறடாவுமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதா? என்பது குறித்து கேட்டபோது அவர் வலம்புரிக்கு இதனைத் தெரிவித்தார்.

பேச்சை ஆரம்பிப்பது குறித்து நாம் நோர்வேயுடன் தொடர்பு கொண்டுள்ளோம் எனினும் ஜே.வி.பியும், ஐக்கிய தேசியக்கட்சியும் அதற்கு முட்டுக்கட்டை போட்டுள்ளனர். எவர் எத்தனை தடைபோட்டாலும் அரசு எடுக்கும் முயற்சி தோல்வியடைவதில்லை.

ஆனால் விடுதலைப்புலிகளின் பதில் எதுவும் எமக்குக் கிடைக்காததால் பேச்சை ஆரம்பிக்க முடியவில்லை எனவும் அவர் கூறினார். விடுதலைப்புலிகள் பேச்சுக்குத் தயார் எனக் கூறுவார்களாயின் இப்போதும் நாம் அதற்குத் தயார். அதற்காக அரச தரப்புப் பிரதிநிதியாக நான் பேச்சு நடத்துவேன் என்றார் அவர்.

இராணுவம் வலிந்த தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளாது. ஆனால் விடுதலைப்புலிகள் இராணுவம் மீது தாக்குதல் நடாத்துவார்களாயின் அவர்கள் மீது பாரிய எதிர்த் தாக்குதல்களை இராணுவம் மேற்கொள்ளும். இதன் மூலம் வடக்கில் பாரிய போர் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

எனினும் இரு தரப்பும் சமாதானப் பேச்சை ஆரம்பித்தால் போர் நடவடிக்கைகளை தடுக்க முடியும் எனவும் கூறினார். இதேவேளை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள பொருட் தட்டுப்பாடு, விலை உயர்வு என்பன குறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மேலும் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டத்திற்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்காவிட்டாலும் அதனை நாம் நிறைவேற்றுவோம். வரவு செலவுத் திட்டம் நெருங்கும்போது அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையும் சாத்தியம் உள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைக்க ஒத்துழைப்பு வழங்காது. அரசாங்கத்துக்கு எதிராக ரணில் மேற்கொள்ளும் பிரசார முயற்சிகள் இனிவரும் காலங்களில் எடுபடாது என்றும் அவர் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஒன்றை நிறுவமுடியும் என்று கனவு காண்கிறார். ஆனால் அவருக்கு 43 உறுப்பினர்களே இருக்கின்றனர். அவர்களுடன் மங்கள மற்றும் சிறிபதி ஆகியோருடன் 45 பேர் உள்ளனர்.

அந்த வகையில் 45 உறுப்பினர்களை வைத்துக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்ற முடியுமா? அதற்கு முடியாது என்ற பதிலே அதிகளவில் கிடைக்கும். ஜே.வி.பி.ஒருபோதும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவு வழங்காது. அது உறுதியாகிவிட்டது.

எனவே ஐக்கிய தேசியக்கட்சி இதற்குப் பின்னரும் ஜே.வி.பி. தொடர்பிலும் எதிர்பார்ப்புக்களை வைத்திருப்பது அர்த்தமற்ற விடயமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒருபோதும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைக்க ஒத்துழைப்பு வழங்காது. இது தெளிவான விடயமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்காது என்பதும் எமக்குத் தெரியும். ஆளும் கட்சிக்கோ ஐக்கிய தேசியக் கட்சிக்கோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் ஆதரவு வழங்காது.

தம்மிடம் 108 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாக மங்கள சமரவீர கூறுகிறார். முடியுமானால் அவர்களின் பெயர் பட்டியலை வெளியிடுமாறு நான் சவால் விடுகின்றேன். 108 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் களை வெளியிட்டால் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து பரிசீலிப்போம்.

எமது அரசாங்கத்தின் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்திற்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்காவிட்டாலும் நாங்கள் அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவோம். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியன வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்தாலும் நாங்கள் மேலதிக வாக்குகளால் வெற்றி பெறுவோம். வரவு செலவுத்திட்டம் நெருங்கும்போது அரசாங்கத் தரப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையும் சாத்தியம் உள்ளது என அவர் மேலும் கூறினார். (ச-5)

## வலிந்த...

ஏற்கவேண்டியுள்ளது. வாக்கெடுப்பு நடத்த... வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டால் அதனை மக்கள் மன்றத்தில் முன்வைப்போம்... இராணுவத்திற்கு எதிரான மனித உரி... மீறல்கள் தொடர்பிலான விசாரணை... மெதுவாக நடத்தப்படுவதாக கூற... உண்மையில்லை.

மனிதாபிமானப் பணியாளர்கள் பாது... பில் இலங்கை மிக மோசமான இடமாக ... ளது என்று ஐ.நா.அதிகாரி கூறியமைக்கு... ராக அரசாங்க கொறடாவும் அமைச்சரும... ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்த... கருத்துக்களுக்காக அவர் மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை.

ஐ.நா.அதிகாரி ஜோன் ஹோல்மளை பயங்கரவாதி என்று ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே விமர்சனம் செய்தமையானது அவரது தனிப்பட்ட கருத்தாகும். அரசாங்கத்தின் கருத்து அல்ல. ஆகையால் மன்னிப்புக் கேட்கவேண்டிய தேவை இல்லை என்றார் அவர்.

இதேவேளை வட பகுதியில் வலிந்த தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் அறிவித்திருந்தமையானது அனைத்துலக அளவில் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில் தற்போது ரோகித அதனை மறுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## முல்லைத்தீவில்...

குதல்கள் நடத்தப்பட்டது. எனினும் பாதுகாப்பான இடங்களை மக்கள் உடன் நாடியமையினால் இழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. வேவு விமானம் நோட்டமிட்டதைத் தொடர்ந்து இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என கிளிநொச்சி செய்திகள் தெரிவித்தன. (எ-1)


**INFORMATION TECHNOLOGY PARK**

Jaffna, Sri Lanka.

Under the purview of the

**Ministry of Science and Technology**

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.

Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

**Diploma Courses**

- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

**On-Line Classes**

- Diploma in PC Application & Office Management
(MS Office syllabus included)

**Work shop**

- PC Maintenance & Repairs

**Certificate Courses**

- Ms Word
- Ms Excel
- Ms Access
- CorelDRAW
- Page maker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் 12/09/2007
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் 15/09/2007

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம்: 250/-

Centre for Information Technology

-Executive Officer


## மரண அறிவித்தல்



அருட்திரு
**B.F.பொனிபஸ் அடிகளார்**

அருட்திரு B.F.பொனிபஸ் அடிகளார் 27.08.2007 அன்று கொழும்பில் காலமானார். இவரின் நல்லடக்கச் சடங்குகள் 01.09.2007 சனிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு கொழும்பில் இடம் பெறும்.

*01.09.2007 அன்று காலை 9 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.*

தகவல்
செயலர்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

(சி-312)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2007 இல் அச்சிட்டு வெளியிடப்ப...